
பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

தரமானதே சிறந்தது என்றால்

சொலிட்
பம்பையே வாங்குங்கள்

# உதயன்

விலை ரூபா 3-50

When only The best is Good Enough

Buy Solide Pumps

சுடர் 5: பிரமோதூத ஞூ ஆனி மீ 4 உ திங்கட்கிழமை ஹிஜ்ரி 1410 துல்ஹஃதா பிறை 24 (18-06-1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர் 115

# நேற்றைய யுத்த நிறுத்த மீறல்கள்; புலிகள் வெளியிட்ட தகவல்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 18

வடக்கு, கிழக்கில் நேற்று முன்தினம் மாலை யுத்த நிறுத்தம் அமுலுக்கு வந்த பின்னர் அரச படையினரால் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் சில யுத்த நிறுத்த மீறல் சம்பவங்கள் பற்றி விடுதலைப் புலிகள் தரப்பினர் நேற்று மாலையில் செய்தி வெளியிட்டனர்.

நேற்று மாலை வரை தங்களுடைய அலுவலகத்துக்குக் கிடைத்த யுத்த நிறுத்த மீறல்கள் பற்றிய சம்பவங்களில் சிலவற்றை விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர் ஒருவர் பத்திரிகைகளுக்கு வெளியிட்டார்.

அவற்றின் விவரம் வருமாறு:—

## ● பெரியபோரதீவில் 150 வீடுகள் எரிப்பு

மட்டக்களப்பு மாவட்டம் பெரிய போரதீவில் தமிழர்களின் 150 வீடுகள் சிங்களப் படையினரால் தீவைத்து எரிக்கப்பட்டன.

அம்பாறை, மட்டக்களப்பு மாவட்ட எல்லையில் உள்ள தந்தாமலை என்ற கிராமத்திலும் தொடர்ந்து தமிழர்களின் வீடுகள் நேற்று எரிக்கப்பட்டன (உ)

## ● சிற்றூர் அவை தலைவர் சுட்டுக்கொலை

அம்பாறை மாவட்டம் மல்வத்தையில் கணபதிபுரம் என்ற இடத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் சிற்றூர் அவைத் தலைவர் திரு. கனகரத்தினம் இராணுவத்தினரால் நேற்று சுட்டுக் கொல்லப்பட்டார்.

அதே இடத்தில் சித்திரவேலு என்பவரின் இரு கைகளையும் சிங்களப்படையினர் வெட்டியுள்ளனர் அந்தப் பகுதியில் மூன்று தமிழ்ப் பெண்களையும் படையினர் கைது செய்து முகாமுக்குள் கொண்டு சென்றுள்ளனர். (உ)

## ● கிழக்கில் நேற்று பொம்மர் தாக்குதல்

சளுவாஞ்சிக்குடி, கல்லடி, கும்புறுமுனை, புனானை ஆகிய இடங்கள் உட்பட மட்டக்களப்பு மாவட்டம் முழுவதும் நேற்று பொம்மர்களின் குண்டு வீச்சுத் தாக்குதல்கள் தொடர்ந்து இடம்பெற்றன.

இந்தத் தாக்குதல்களில் ஒரு குழந்தை உட்பட மூவர் கொல்லப்பட்டதாக நேற்று மாலை வரை கிடைத்த செய்திகள் தெரிவித்தன. [உ]

## ● கட்டுவனில் போராளிகளை நோக்கிச் சூடு

நேற்றுக் காலை கட்டுவனில் நிறுத்தப்பட்டிருந்த எமது புல்டோஸரை எமது போராளிகள் எடுக்கச் சென்றபோது பலாலி முகாம் பக்கத்திலிருந்து வெளியேறிய இராணுவம் அவர்களை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்தது.

எமது போராளிகள் திருப்பித் தாக்குவதைத் தவிர்த்து பின்நோக்கி விலகிச் சென்றனர்.

முன்னேறி வந்தஅரசபடையினர் புல்டோஸர் நின்ற இடத்தைச் சூழ கண்ணி வெடிகளை புதைத்துவிட்டுச் சென்றனர். [உ]

## ● வன்னியிலும் பொம்மர் தாக்குதல்

வவுனியா, முல்லைத்தீவு, மாங்குளம் முதலிய பகுதிகளில் பொம்மர்கள் நேற்றும் பெரும் தாக்குதலை நடத்தின.

வவுனியாவில்பொதுமக்கள் வாழும் பகுதிகளை நோக்கி ஸ்ரீலங்கா அரச படையினர் விட்டு விட்டு ஷெல் தாக்குதல்களையும் நடத்தி வருகின்றனர். [உ]

## ● திருமலையில் பல அசம்பாவிதங்கள்

திருகோணமலை மூன்றாம் கட்டையில் அலஸ் தோட்டப் பகுதியில் இரண்டு பொதுமக்கள் நேற்று படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

ஆறாம் கட்டையில் பொம்மர்கள் நேற்று நடத்திய குண்டு வீச்சில் இரு வீடுகள் சேதமுற்றன.

திருகோணமலை மாவட்டத்தில் தமிழர்களுக்குச் சொந்தமான முன்னூறுக்கும் மேற்பட்ட வீடுகள் எரிக்கப்பட்டுள்ளன.

மூதூரிலும் தமிழர் ஒருவர் படையினரால் கொலை செய்யப்பட்டார்.

இரு வீடுகளும், நான்கு கடைகளும் சிங்கள இராணுவப் படையினரால் நேற்று எரிக்கப்பட்டுள்ளன. (உ)

## ● முகாமுக்கு வெளியே வந்த படையினர்

வவுனியா காமினி மகாவித்தியாலய முகாமில் இருந்த இராணுவத்தினர் நேற்று முகாமை விட்டு வெளியே வந்து முன்னேறி முகாமுக்கு இருநூறு யார் தூரத்தில் பாதுகாப்பு அரண்களை அமைத்து வருகின்றனர்.

யுத்த நிறுத்தம் அமுலுக்கு வந்தபோது இருந்த நிலைகளை விட்டு முன்னேறுவதும் ஒருவகையில் யுத்த நிறுத்த மீறலேயாகும். (உ)

## ● அம்பாறையிலும் படை வெளியேற்றம்

அம்பாறையிலிருந்தும் இராணுவத்தினர் நேற்று வெளியேறி களுவாஞ்சிக்குடி நோக்கிச் சென்றனர்.

வழியில் நாம் அவர்களை இடைமறித்ததை அடுத்து, அவர்கள் தற்போது முன்னேறியோ அல்லது பின்னேறியோ செல்லாமல் பட்டிருப்பு பாலத்தில் 'சென்றி' அமைத்து அங்கேயே நிலைகொண்டிருக்கிறார்கள். (உ)

## ● விமான உதவி கேட்கும் இராணுவம்

மட்டக்களப்பில் உள்ள இராணுவ அதிகாரிகள் தமக்கு மேலும் விமானம் மற்றும் ஹெலிகளை அனுப்பிவைக்குப்படி இராணுவ தலைமையகத்திடம் கேட்டிருக்கிறார்கள்.

-- இவ்வாறு அவர்கள் உதவி கோரியிருப்பது பற்றி எமக்கு நம்பிக்கையான வட்டாரங்களில் இருந்து செய்தி கிடைத்திருக்கிறது. (உ)

# பூநகரியில் நேற்று ஹெலி சூடு! இறுதிஊர்வலத்தில் சென்றோர் மீது!!

பூநகரி, ஜூன் 18

பூநகரியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை நான்கு மணியளவில் ஹெலித் தாக்குதல் நடத்தப்பட்டது.

மோதலில் வீரமரணம் அடைந்த போராளி ஒருவரின் இறுதி ஊர்வலம் நடந்து கொண்டிருந்த போது, அதில் கலந்துகொண்டவர்கள் மீதே ஹெலி வேட்டுக்களைத் தீர்த்தது.

பலாலியில் நடந்த மோதலில் பூநகரி, நல்லூர், பத்தாம் கட்டையைச் சேர்ந்த சதாசிவம் தயாளன் என்ற விடுதலைப் புலிகள் போராளி மரணமடைந்தார். அவரது சடலம் பூநகரிக்குக் கொண்டுவரப்பட்டு நேற்று இறுதிக் கிரியைகள் நடைபெற்றன.

அவருக்கு அஞ்சலி செலுத்து முகமாக ஆயிரக்கணக்கான மக்கள் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டனர். வீட்டிலிருந்து இறுதி ஊர்வலம் புறப்பட்டு நூறு யார் தூரம் செல்வதற்கிடையில் திடீரென அங்கு வந்த ஹெலி சரமாரியாக வேட்டுக்களைத் தீர்த்தது. மக்கள் அச்சத்தினால் சிதறி ஓடியபோதிலும், ஹெலி தொடர்ந்து வட்டமிட்ட வண்ணம் வேட்டுக்களைத் தீர்த்தது.

ஹெலித் தாக்குதலினால் உயிரிழப்பு எதுவும் நடந்ததா என்பதுகுறித்து எமது செய்தியாளர் இச் செய்தியை அனுப்பும் வரை உடனடியாகத் தெரியவரவில்லை. (அ-ரி)

## முச்சந்தி முரளி



இணக்கமும், மீறலும், முரண்பாடும் எண்டால் சடைசியில் என்னத்திலை முடியப் போகுது?

## யுத்தம் வெடிக்கும் ஆபத்து!

லண்டன், ஜூன் 18

வடக்கு, கிழக்கில் யுத்த நிறுத்த உடன்பாடு குலைந்து யுத்தம் ஏற்படும் ஆபத்து ஏற்பட்டிருப்பதாக பி பி ஸி நள்ளிரவு அறிவித்தது.

கிழக்கில் பல இடங்களில் நேற்று மோதல் வெடித்ததாகவும் —

கிரான், வவுனியாவில்சண்டை நடைபெற்று வருவதாகவும் பி. பி ஸி மேலும் அறிவித்தது. (உ)

★ அரச படைகள் மீது குற்றச்சாட்டு:

# பல இடங்களிலும் யுத்த நிறுத்த மீறல்

## புலிகள் கடும் ஆட்சேபம்

யாழ்ப்பாணம், ஜூன் 18

வடக்கு, கிழக்கில் நேற்று முன்தினம் மாலையில் யுத்த நிறுத்தம் அமுலுக்கு வந்த பின்னர் பரவலாக பல இடங்களிலும் ஸ்ரீலங்கா அரச படையினர் யுத்த நிறுத்த மீறல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக விடுதலைப் புலிகள் குற்றஞ்சுமத்தியிருக்கின்றனர்.

பொம்மர் குண்டு வீச்சு, ஹெலியிலிருந்து தாக்குதல், ஷெல் தாக்குதல்கள் ஆகியவை பரவலாக பல இடங்களிலும் இடம்பெற்றிருப்பதாகவும்—

தமிழர்கள் பலர் சுட்டும், வெட்டியும் கொல்லப்பட்டிருக்கின்றனர் என்றும்—

தமிழர்களின் வீடுகள், உடைமைகள் போன்றவை எரிக்கப்பட்டு வருவதாகவும், கொள்ளையடிக்கப்பட்டு வருவதாகவும்—

விடுதலைப் புலிகள் குற்றம் சுமத்தியிருக்கின்றனர்.

நேற்று மாலை கோண்டாவிலில் உள்ள விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டின்போது இந்த விடயங்களை விடுதலைப் புலிகள் வெளியிட்டனர்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைவர் திரு கோபாலசாமி மகேந்திர

(4 ஆம் பக்கம் பார்க்க)

# கட்டுப்பாடுகளை மீறி விமானப்படை தன் இஷ்டப்படி செயற்படுகின்றது

## ஜெனரல் சிறில் ரணதுங்க கூறியதாக மாத்தயா தகவல்

யாழ்ப்பாணம், ஜூன் 18

ஸ்ரீலங்கா விமானப் படையினர் எமது கட்டுப்பாட்டின் கீழ் இல்லாமல் தம் இஷ்டப்படி நடந்து வருகின்றார்கள்.

— இவ்வாறு பாதுகாப்பு அமைச்சின்செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்க விடுதலைப் புலிகளிடம் ஒப்புக்கொண்டிருக்கிறார்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பிரதித் தலைவரும் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைவருமான திரு கோ.மகேந்திரராஜாவே இந்தத் தகவலை வெளியிட்டார்.

நேற்று மாலை கோண்டாவிலில் இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் அவர் இத்தகவலைக் கூறினார்.

யுத்த நிறுத்தத்தையும் மீறி நேற்றுப் பல இடங்களில் பொம்மர், ஹெலித் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன. இதுபற்றிபாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்காவுடன் தொடர்பு கொண்டு கேட்டோம்.

அப்போதுஅவர் ''விமானப் படை எமது கட்டுப்பாட்டையும் மீறி தமது இஷ்டப்படி செயற்படுகிறது'' என்று சொன்னார்.

[4 ஆம் பக்கம் பார்க்க]

# காங்கேசனில் இரு முகாம்கள் வெளித் தொடர்பின்றி துண்டிப்பு

## உணவுப் பொட்டலங்கள் ஹெலி மூலம் வீசப்பட்டன

காங்கேசன்துறை, ஜூன் 18

வெளித் தொடர்புகள் ஏதும் இல்லாமல் தனித்து விடப்பட்டிருக்கும் காங்கேசன்துறை திஸ்ஸ விகாரை, மகஸீன் முகாம் இராணுவத்தினருக்கு நேற்று ஹெலிக்கொப்டரில் இருந்து உணவுப் பொட்டலங்கள் வீசப்பட்டன.

இந்த இரு முகாம்களில் உள்ள இராணுவத்தினருக்கு வெளித்தொடர்புகள் முற்றாகத் துண்டிக்கப்பட்டதால் அவர்களுக்கு உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது.

அதைத் தொடர்ந்தே ஹெலி வட்டமிட்டு உணவுப் பொட்டலங்களை வீசியது.

## யுத்த நிறுத்தம் திருப்திகரமாக அமுலாவதாக அரசு அறிக்கை

கொழும்பு, ஜூன் 18

இலங்கை அரசுப் படைகளுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் இடையே நேற்று முன்தினம் மாலை 6 மணி முதல் அமுலுக்கு வந்த யுத்த நிறுத்தம் திருப்திகரமாகத் தொடர்கிறது.

இப்படி பாதுகாப்பு அமைச்சு நேற்று மாலை விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்தது. ஒரு சில சிறு அத்துமீறல்களே இடம்பெற்றன. தூர இடங்களில் உள்ளவர்களுக்கு தகவல்கள் கிடைக்க ஏற்பட்ட தாமதமே இந்த அத்துமீறல்களுக்கு காரணமாக இருக்கலாம் என்று பாதுகாப்பு அதிகாரிகள் கருதுகின்றனர்—

எனினும், பாதுகாப்பு அதிகாரிகள் நிலைமையை அவதானித்து வருகின்றனர்—

இப்படி பாதுகாப்பு அமைச்சு அறிக்கையில் கூறப்பட்டிருந்தது. (இ-எ)

## சுப நேரம்

18-6-90

திங்கட்கிழமை ஆனி 4

சுபநேரம்:

11.53 01 23

இராகுகாலம்

07.23 -08 53

# பொம்மருக்கு பலியான 7 பேரின் சடலங்கள் ஒரே சிதையில் எரிப்பு

## மல்லாகம் மயானத்தில் நேற்று

காங்கேசன்துறை, ஜூன் 18

மயிலிட்டியில் பொம்மர் தாக்குதலில் பலியான ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஏழு பேரின் சடலங்களும் நேற்று மல்லாகம் மயானத்தில் ஒரே சிதையில் வைத்து தீமூட்டப்பட்டன.

தெல்லிப்பளை ஆஸ்பத்திரியில் இந்தச் சடலங்கள் வைக்கப்பட்டிருந்தன. அங்கு மரணவிசாரணை நடத்தக் கூடிய சூழ்நிலை இல்லாததால் மரண விசாரணை நடத்தாமலேயே உறவினர்கள் சடலங்களைப் பொறுப்பேற்று அன்றைத் தகனம் செய்தனர்.

(உ 3-68)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறுவிளம்பரம்


### விற்பனைக்கு

ஒல்லாந்திலிருந்து இறக்குமதி செய்த (Crimsonglobe) பீட்றூட் விதை விவசாய ஆய்வுகூட அனுமதிபெற்றது. உயர் விளைச்சல் தரவல்லது. 200 கிராம் டின் ரூ 150.00 தேவைக்கு: பிள்ளையார்' 259, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (3736)

### புறொயிலர் குஞ்சுகள்

Christombu Farm, Three-acre Farm, Bairaha Farm, புறொயிலர் குஞ்சுகளை முன் கூட்டியேபதிவுசெய்து பெற்றுகொள்ளலாம். Bairaha Farm புறொயிலர் குஞ்சுகள் மட்டும் July 15 வரை மட்டுப்படுத்தப்பட்ட விநியோகம். July 15 இன் பின் தேவையான அளவு Bairaha Farm புறொயிலர் குஞ்சுகளைப் பெற்றுக் கொள்ளலாம். சற்குணராசா அன் பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில். (3774)

### தேவை

மூன்று பேர் கொண்ட சிறு குடும்பத்திற்கு மாநகரசபை எல்லைக்குள் ஒரு பகுதி வீடு அல்லது முழு வீடு வாடகைக்குத் தேவை. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: 32, பிரப்பன் குளம் றோட், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (13504)

### மணமகள் தேவை

இந்து உயர் குல வேளாளர் யாழ் இலங்கை வங்கி, இலிகிதர், உதயத்தில் செவ்வாய், பூர நட்சத்திரம், வயது 34. முதற் கடிதத்தில் முழு விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும். இல:732, C/o உதயன். (3905)

### ரைப்பிங் சேவை

தமிழ். ஆங்கிலம் ரைப்பிங் மற்றும் Stencils Cutting குறைந்த செலவில் ரைப்பிங் செய்து கொடுக்கப்படும். நாடுங்கள்: FUDO 39/17, மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (சி/4740)

### வாடகைக்கு

சிங்கப்பூர், இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்ட புத்தம் புதிய தலை நகை சோடனை செற் எம்மிடம் வாடகைக்குப் பெற்றுக் கொள்ளலாம் தொடர்பு ராசி சில்க்ஸ் 70, நியூ மார்க்கட், யாழ்ப்பாணம் [சி/4559]

### English By B. Manjula

The Course [4 Months Programme] Covers. 1 Grammar 2. Spelling 3. Cholse of words 4. Writing 5. Pronouunciation வெளிநாடு செல்வோர்க்கு பொருத்தமானது. ஆரம்பம்; 18-6 1990 21/2, அம்மன் வீதி, சந்தர்மடம். (13441)

### TOEFL

August / Cctober / November - 90 பரீட்சை எடுப்பவர்களுக்குப் பிரத்தியேக வகுப்பும், தனிப்பட்ட வகுப்பு வசதியும் உண்டு தொடர்பு; S. B Iyar, 12 [36], வைமன் வீதி, நல்லூர். [13385]

### தவறி விட்டது

எனது காருக்குரிய லைசென்ஸ், அடையாள அட்டை இல: 441370148 V சாரதி அனுமதிப்பத்திரம், காப்புறுதி அனுமதிப்பத்திரம், இவற்றையடங்கிய கைப்பேசுடன் தவறி விட்டது கண்டெடுத்தவர்கள் தயவு செய்து S. சிதம்பரநாதன் (நாதஸ்வரம்), அளவெட்டி வடக்கு, என்ற முகவரியில் அல்லது உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும்: (3906)


# இலட்சியத்தை அடைவதற்கு மக்கள் எழுச்சியும் தேவை

## எழுதுமட்டுவாள் கூட்டத்தில் உரை

பச்சிலைப்பள்ளி ஜூன் 18

தமிழீழ இலட்சியத்தை ஆயுங்களைப் பாவிப்பதனால் மட்டுமல்ல அனைத்து மக்களின் எழுச்சியினாலேயே வெற்றி அடைய முடியும், இப்போராட்டத்துக்கு இளைஞர்கள் யுவதிகள் மட்டுமல்ல வயது வேறுபாடின்றி அனைவரும் ஒத்துழைக்கவேண்டும்.

எழுதுமட்டுவாள் பொதுச் சந்தையில் நிர்மானிக்கப்பட்ட வீரவேங்கைகள் சிவா, கருணா, ஜெகன், விக்னா ஆகியோரின் உருவப் படத் திறப்பு விழாவில் கலந்து கொண்டு பேசிய விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தென்மராட்சிப் பிரிவு அரசியல் பொறுப்பாளர் கே. பாப்பா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில்: உயிரைவிட மேலான மானத்தையும் கொள்கைகளையும் காப்பாற்ற எமது வீரர்கள் தியாகங்களைப்புரிந்து கொண்டிருக்கும் இக்காலகட்டத்தில் சில பெற்றோர் தமது பிள்ளைகளை அந்நிய நாடுகளுக்கு அகதிகளாக அனுப்புவது வேதனைக்குரியது என்றார்.

பச்சிலைப்பள்ளி அரசியல் பொறுப்பாளர் செல்வராசா பேசுகையில்: உலகின் எந்தப் பாகத்திலும் தமிழன் வாழ்ந்தாலும் அவன் தலைநிமிர்ந்து வாழும் நிலையை எமது தமிழீழ மக்கள் ஏற்படுத்த வேண்டும் என்றார்.

கொடிகாமம் அரசியல் பொறுப்பாளர் ராகுலன் அதிபர் பொன். தில்லைநாயகம் உட்பட பலர் உரையாற்றினர்.

வேங்கைகளின் பெற்றோர் உருவப்படங்களை திறந்து வைத்து மலர் மாலைகள் சூட்டி அஞ்சலி செலுத்தினர். (இ-117)

## நவாலியில் நவநாள்

குருநகர், ஜூன் 18

நவாலி தெற்கு, சம்பேதுருபாவிலு ஆலய வருடாந்த நவநாள் கொண்டாட்டங்கள் இம்மாதம் 20-ஆம் திகதி புதன் கிழமை மாலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து ஒன்பது தினங்கள் நடைபெறும்

28-ஆம் திகதி வியாழக்கிழமை மலை நற்கருணை ஆராதனை சுற்றுப்பிரகாரம் என்பன நடைபெறும்.

29-ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7-மணிக்கு திருநாள் பாடல் கூட்டுத் திருப்பலி பங்குத் தந்தை வண. சாள்ஸ் செந்தில்வேல் அடிகள் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்பெறும் அதனைத் தொடர்ந்து திருச்சொரூப தேர்ப்பவனி, ஆசீர்வாதம் என்பவற்றுடன் திருநாள் கொண்டாட்டங்கள் நிறைவு பெறும். (இ-51)

## 15 வயதுக்குட்பட்டோர் கிரிக்கெட்:

## மகாஜனாக்கல்லூரி வெற்றி

யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் நடத்தும் பதினைந்து வயதுக்கு உட்பட்ட அணிகளுக்கிடையிலான கிரிக்கெட். போட்டியில் மகாஜனாக் கல்லூரி அணி யாழ்ப்பாணக் கல்லூரி அணியை எட்டு விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது

யாழ்ப்பாணக் கல்லூரி அணி முதல் இன்னிங்ஸில் 96 ஓட்டங்களைப் பெற்றது. செந்தன் 31, ராஜ்மோகன் 15 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் நிரஞ்சன் நான்கு விக்கெட்டுகளையும் கம்சரூபன் மூன்று விக்கெட்டுகளையும் ஸ்ரீகிருஷ்ணன் இரண்டு விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

அடுத்து மகாஜனாக் கல்லூரி அணி தனது முதல் இன்னிங்ஸில் 83 ஓட்டங்களைப் பெற்றது. வசந்தரூபன் 27, ரகுராமன் 15, ஸ்ரீகிருஷ்ணன் 10 ஓட்டங்களைப் பெற்றனர். சாமி நான்கு விக்கெட்டுகளையும், அஜித், ராஜ்மோகன் இருவரும் தலா இரண்டு விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து தனது இரண்டாவது இன்னிங்ஸை தொடங்கிய யாழ்ப்பாணக் கல்லூரி 20 ஓட்டங்களையே பெற்றது. சஞ்சயன், சண்முகராஜா இருவரும் தலா 05 ஓட்டங்களைப் பெற்றனர். நிரஞ்சன் ஆறு விக்கெட்டுகளையும், ஸ்ரீகிருஷ்ணன் நான்கு விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

அடுத்து மகாஜனாக் கல்லூரி தனது இரண்டாவது இன்னிங்ஸில் வெற்றிக்கு தேவையான 34 ஓட்டங்களையும் இரண்டு விக்கெட் இழப்பிற்கு பெற்று வெற்றியீட்டியது. விமலேந்திரன் ஆட்டம் இழக்காமல் 12 ஓட்டங்களைப் பெற்றார்.

இப்போட்டிக்கு திருவாளர்கள் அற்புதநாதன், முருகவேள் ஆகியோர் மத்தியஸ்தம் வகித்தனர். (இ-மு)

## சிறுவர் பராமரிப்புநிலைய போட்டிகள்

மானிப்பாய் ஜூன் 18

தென் இந்திய திருச்சபையின்யாழ்ப்பாண ஆதீனத்தை சேர்ந்த சத்தியபுரம் சிறுவர் பராமரிப்பு நிலையத்தின் வருடாந்த விளையாட்டுப் போட்டிகளும் விற்பனை விழாவும் இம் மாதம் 23 ஆம் திகதி நடைபெறும். (இ-90)

## 15 வயதுக்கு உட்பட்டோர் கிரிக்கெட்

## யாழ்ப்பாணக் கல்லூரி வெற்றி

யாழ்ப்பாணம் ஜூன் 18

யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் நடத்தும் பதினைந்து வயதுக்கு உட்பட்ட அணிகளுக்கிடையேயான கிரிக்கெட் போட்டியில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணியினை யாழ்ப்பாணக் கல்லூரி அணி புள்ளிகள்வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

முடிவில் ஆடிய யாழ்ப்பாணக் கல்லூரி அணி முதல் இன்னிங்ஸில் 113 ஓட்டங்களைப் பெற்றது வரப்பிரதன் 35, சிவதரன் 17, சக்திவடிவேல் 11 ஓட்டங்களை பெற்றனர். பிரதீஸ்குமார நான்கு விக்கெட்டுகளையும் அகிலன் ஜெயநிதி இருவரும் தலா இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

அடுத்து ஆடிய யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி முதல் இன்னிங்ஸ் ஸில் 96 ஓட்டங்களைப் பெற்றது. அபிராம் 23, அகிலன் 21, ஜெயநிதி 11, சஞ்சீவ் 10 ஓட்டங்களைப் பெற்றனர். ராஜ்மோகன் ஐந்து விக்கெட்டுக்களையும், செந்தன் 3 விக்கெட்டுக்களையும் சிவதரன் இரண்டுவிக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து ஆடிய யாழ்ப்பாணக் கல்லூரி அணி ஆட்ட நேர முடிவின் போது 3 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 98 ஓட்டங்களைப் பெற்றது. சிவதரன் ஆட்டம் இழக்காது 32. வரப்பிரதன் 22, அஜித் 14 ஓட்டங்களைப் பெற்றனர். அபிராம் நான்கு விக்கெட்டுக்களையும் டிவகலால இரண்டு விக்கெட்டுகளையும் கைப்பற்றினர். (இ - மு)

## மாணவர் தேவை அனுசரித்தே இடமாற்றம்

கொழும்பு ஜூன் 18

மாணவரின் தேவைகளை அனுசரித்தே ஆசிரியர் இடமாற்றங்கள் செய்யப்படும் என்று கல்விச் சேவைகள் ஆணைக்குழுத் தலைவர் ஜோர்ஜ் மெண்டிஸ் தெரிவித்தார். (இ-எ)

## இட மாற்றம் கோரி மகஜர்

கைதடி ஜூன் 18

சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் சங்கத்தானைக் கிளை முகாமையாளரை உடனடியாக இடமாற்றம் செய்யும்படி கோரும் மகஜர் ஒன்றை மேற்படி கிளை நிர்வாகம் சங்கத்தின் பொது முகாமையாளரிடம் கையளித்துள்ளது. (இ-74)

# சைவத்தின் மேன்மையை எடுத்துச் சொல்ல வேண்டும்

## திருஞானசம்பந்தர் குருபூசையில் உரை

காங்கேசன்துறை, ஜூன் 18

இன்றைய கஷ்டமான சூழ்நிலையை தங்களுக்குச் சாதகமாக்கிக் கொண்டு சில உதவிகளைக் கொடுத்துமதம் மாற்றம் செய்வதில் வேற்று மதத்தவர்கள் ஈடுபடுகிறார்கள். ஆகவே சைவர்களாகிய நாம் சைவத்தின் மேன்மையை எடுத்து விளக்கி மதம் மாறுவோரை தடுத்து நிறுத்த வேண்டும்.

அளவெட்டி அமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையில் இடம்பெற்ற திருஞானசம்பந்தர் குருபூசை விழாவில் கலந்துரையாற்றிய பண்டத்தரிப்பு கோட்டக் கல்வி அதிகாரி திரு. எஸ். சிவராஜரத்தினம் மேற்கண்டவாறு கூறினார்.

பாடசாலை அதிபர் திரு ப. தளையசிங்கம் தலைமையில் விழா நடைபெற்றது.

அவர் மேலும் பேசுகையில் சைவமதத்தின் பெருமைகளை நிலை நாட்டி அதனைக் காத்து வளர்த்ததில் ஞானசம்பந்தர் பெரும்பங்கு கொண்டிருந்தார். சமணர்களுக்கு சைவத்தின் உண்மையை உணர்த்தி சைவம் தழைத்தோங்க வழி வகுத்தார். அவரது வழிகாட்டலில் நாமும் சைவ மதத்தைப் போற்றிக் காக்க பாடுபட வேண்டும்'' என்றார். (இ-68)


## தசாக அறிவித்தல்

11-06-90 திங்கட்கிழமை சிவபதமடைந்த சிவஸ்ரீ சோ. தங்கசாமிக் குருக்கள் அவர்களின் தசாகக் (10ஆம் நாள்) கிரியை 20-06-90 புதன்கிழமை காலை 10 மணிக்கும், கிரகயக்ஞம் சமாராதனை 23-06-90 சனிக்கிழமையும் மட்டுவிலில் நடைபெறும்.

இவ் வைபவத்தில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்:

மக்கள், மருமக்கள்.

திருக்கணிதம்,
மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி. [3875]

## வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கள்

மத்திய கிழக்கு நாடுகள்:

★ ஈராக்
நாட்டிற்கான வேலை வாய்ப்புக்கள்:
Masons, Drivers, Painters, Carpenters, Air port & Hospital Cleaners, Labourers, Gardeners விரைவில் பயணமாகலாம், அத்துடன் பணிப் பெண்களும் உடன் தேவை.
வயது 25 — 35ற்குள்

★ குவைத்:
வீட்டுப் பணிப்பெண்கள் 30 குவைத் டினார்மற்றும் பாடசாலை பணிப்பெண்கள் சம்பளம் 25 குவைத் டினார் மற்றும் வேலைகளும் உண்டு. ஜூலை மாதத்திற்கு முன்பாக விண்ணப்பிக்கவும். ஆகஸ்டில் வேலையிலிருக்கலாம்.

★ சிங்கப்பூருக்கும் பணிப்பெண்கள் தேவை

★ எலக்ரீசியன் சம்பளம் 7500/-
சாப்பாடு, இருப்பிடம் இலவசம்

★ டுபாய் ★ பெரூட்
ஆகிய நாடுகளுக்கும் விண்ணப்பிக்கவும்,

★ கப்பல் வேலை வாய்ப்புக்கள்:
C. D. C Passport உடனும் அனுபவ சான்றிதழ்களுடனும் விண்ணப்பிக்குக.
இரண்டாம், மூன்றாம் ஆபிசர்கள், என்ஜினியர்கள், ரேடியோ ஆபிசர்கள், மின் இணைப்பாளர்கள் உடன் தேவை.
★ Frishers உம் உடன் தேவை

★ EUROPE:
ஐரோப்பிய நாடுகளுக்கு போக விரும்புபவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.

● இத்தாலிக்கு போக விரும்புபவர்கள் யூலை மாதம் 10ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும் தூதராலய மூலம் விசா பெற்று 35 — 40 நாட்களுக்குள் பிரயாண ஒழுங்கு செய்து கொடுக்கப்படும். கூடுமான வரை ஆங்கில அறிவு இருப்பது விசா எடுப்பதை இலகுவாக்கும்.

SIVA TOURS & TRAVELS
Prop: N. Sivapathasundaram
404, 2nd Floor, Hospital Road,
JAFFNA.
[Dilka மேல் மாடி]
[சி-4803]



## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திரு. நாகநாதர் சிவசிவாபிள்ளை
(இளைப்பாறிய நீர்ப்பாசனத் திணைக்கள ஓவசியர்)

மலர்வு:- 10-07-1910
உதிர்வு:- 20-06-1987


திதி:- 18-06 1990

எங்கள் குடும்ப ஒளிவிளக்காய் - நின்று
எம்மை வாழ்வித்த அன்புத் தெய்வமே!
தங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

''கனகஸ்தான்''
566/4. கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம். (13397)






● சகலபாகங்களும் உலோகத்தாலனது
● சட்ட எம்பிரோய்டரி வேலை
● பிக்கொட் தையல்.
● இரட்டை ஊசி தையல்.
● ஸ்கலப் தையல்.
● 14-55 வித தையல்.
● 1 வருட உத்தரவாதம்.
● நாடளாவிய விநியோகம்.





உஷா
ஒப்பற்ற பாரம் பரியம்
உஷா இண்டஸ்றீஸ் லிமிட்டட
68, அத்திடிபா வீதி, இரத்ம லான்
தொலைபேசி: 71-6922, 7934-7381.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**

தொடிற்சுடின் அல்லது காமநோய் போல
விடிற்சுடல் ஆற்றுமோ தீ.

**பொருள்:**

நெருப்பு, தன்னைத் தொட்டால் சுடுமே அல்லாமல் காமநோய்போல் தன்னை விட்டு நீங்கிய பொழுது சுடவல்லதாகுமோ?

உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 2288
18 - 06 - 1990 சு. பெ இலக்கம் 23

# போர் நிறுத்தம் நிரந்தரமாக...

**வ**டக்கு - கிழக்குப் பிரதேசங்களில், தமிழர் வாழும் பகுதிகளில், ஆறு நாட்களாக நடந்த யுத்தம் சனிக்கிழமை மாலை ஆறு மணியுடன் ஓய்ந்தது. யுத்தத்தில் ஈடுபட்ட இரு தரப்பிலும் ஏற்பட்ட ஆட்சேதம், ஆயுதச் சேதம் பற்றி முழுமையான சரியான கணக்கு இன்னும் தெரிய வரவில்லை. (யுத்தத்தில் இடையில் அகப்பட்டு அகால மரணமான அப்பாவிப் பொதுமக்களின் - தமிழ் மக்களின் — எண்ணிக்கையும் இன்னமும் அச்சொட்டாகத் தெரியாது) ஒவ்வொரு தரப்பிலும் ஏற்பட்ட சேத விவரம் சரியாகத் தெரியாமல் யாருடைய பலம் ஓங்கி இருந்தது அல்லது யாருக்கு வெற்றி என்பதை உடனடியாகச் சொல்வது சிரமம்.

எனினும், வடக்கு - கிழக்கில் உள்ள பொலீஸ் நிலையங்கள் பலவற்றையும் பிரதான - பெரிய-இராணுவ முகாம்கள் பலவற்றையும் விடுதலைப் புலிகள் தம்வசமாக்கிக் கொண்டதை கருத்தில், பலக் கணிப்பில் கவனத்தில் எடுத்துக், கொள்ளாமல் இருக்க முடியாது. பொலீஸ் நிலையங்களும், இராணுவ முகாம்களும் வீழ்ந்ததை அரசாங்கமே ஒப்புக்கொண்டிருக்கிறது. ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசா கண்டிக் கூட்டத்தில் ஆத்திரத்துடனும், ஆக்ரோஷத்துடனும் பேசும்போது கூட அதனை ஊர்ஜிதம் செய்திருக்கிறார்,

சாதாரண மக்களுக்குப் பாதிப்பு ஏற்படும் என்பதால் மிகக் குறைந்த மட்டத்திலேயே பாதுகாப்புப் படையினர் தாக்குதல்களை மேற்கொண்டனர் இதன் காரணமாக குடிமக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் உள்ள இராணுவ முகாம்களும், பொலீஸ் நிலையங்களும் தற்காலிகமாகக் கைவிடப்பட்டன — என்று ஜனாதிபதி சொன்னார்.

இது நொண்டிக் குதிரைக்குச் சறுக்கினது சாட்டு என்ற நிலையா?

அது ஒரு புறமிருக்க. பொதுமக்களுக்குப் பாதிப்பு ஏற்பட்டு விடும் என்பதற்காக அரச படைகள் குறைந்த மட்டத்தில் தாக்குதல் நடத்தியே, ஆறு நாளில் சுமார் ஐந்நூறு பொதுமக்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள் என்றால்- முழு மட்டத்தில் பாதுகாப்புப்படையினர் தாக்குதல் நடத்தியிருந்தால் இரண்டாயிரம் பேர் மடிந்திருப்பார்கள் என்று உத்தேசமாக ஒரு கணக்குப் போடலாமா? இதனை இன்னொரு பக்கத்தால் பார்த்தால் பாதுகாப்புப்படையினர் தம்முடன் போரிடும் புலிகளை தாக்குவதற்குப் பதில் பொதுமக்களை அழித்து ஒரு பாடம் புகட்டுவோர்கள் என்று பூடகமாகச் சொல்வதாகப் படுகிறது அல்லவா?

போர் நடந்தால் ஒரு சாராருக்கு வெற்றியும் மறு சாராருக்குத் தோல்வியும் ஏற்படுவேது சகஜம். வெற்றி இறுதியாக்கப்பட்டால் ஒருவர் கைப்பற்றியவற்றை மற்றவருக்குத் கொடுப்பதில்லை ஆனால் மனிதாபிமான ரீதியில் மன்னித்துச் சில சலுகைகளை வழங்குவது வழக்கம்.

ஆறு நாள் போர் வெற்றி தோல்வியை எட்டாத நிலையில் சமரசம் ஏற்பட்டு போர்நிறுத்தம் ஏற்பட்டுள்ளது. ஆனால் அது நிரந்தரமான போர்நிறுத்தமாக அமையுமா என்பதைத் திட்டவட்டமாகக் கூறமுடியவில்லை.

விடுதலைப் புலிகள் போர் நிறுத்தத்துக்கு முன்வைத்த நிபந்தனைகளை அரசாங்கம் செயலில் காட்டுவதில்தான் யுத்தநிறுத்தத்தின் நிரந்தரத் தன்மை தங்கி உள்ளது.

கண்டியில் நடந்த கூட்டத்தில் பேசிய ஜனாதிபதி, வடக்கு கிழக்கில் அமைதியை நிலைநாட்டுவதில் பாதுகாப்புப் படையினர் வெற்றி பெறுவர் என்று யுத்த நிறுத்தம் அமுலுக்கு வருவதற்குச் சில மணி நேரத்திற்கு முன் கூறியிருந்தார்.

ஆனால் அப்பகுதிகளில் அமைதியை நிலை நாட்டும் பொறுப்பை பாதுகாப்புப் படைகளிடம் கொடுக்காது அரசாங்கமே கையேற்க வேண்டும் என நாம் கேட்டுக் கொள்கின்றோம்.

முதலில் போர் நிறுத்தத்துக்கென இணங்கப்பட்ட விடயங்களுக்குத் தாமதியாது - இழுத்தடிக்காமல் - செயல்வடிவம் கொடுக்க வேண்டும்.

அடுத்தது நாம் இப்பத்தியில் அடிக்கடி வலியுறுத்தி வருவது போல—

தமிழ்ப் பகுதிகளில் அத்துமீறலுக்கும், இராணுவ ஆட்சிக்கும், கலவரத்துக்கும் காலாக இருக்கும் இராணுவத்தினரை அதிகரிக்காமல், மாவட்டத்துக்கு ஒரு முகாம் என்ற அளவுக்குக் குறைக்க வேண்டும்.

வட-கிழக்குப் பொலீஸ் நிலையங்களில் சிங்களப் பொலீசாரை கடமைக்கு அமர்த்தக்கூடாது.

அரசமைப்புக்கான ஆறாவது திருத்தச் சட்டத்தை நீக்கி தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைகளை வழங்குவதற்குச் சமிக்ஞை காட்ட வேண்டும்.

அதைவிடுத்து, யுத்தத்தில் படைகள் தோல்வி கண்டு வருவதை அறிந்து, ஒரு நாட்டின் தலைவனுக்கு உரிய பொறுப்பும், மதிப்பும் இல்லாமல் படி இறங்கிப் போய் இராணுவத் தளபதியின் இடத்தைப் பிடித்துக்கொண்டு, பொதுக்கூட்டத்தில் வீரசூரத்தனம் பேசுவது ஒருபோதும் வடக்கு-கிழக்கில் அமைதியைக் கொண்டு வர உதவ மாட்டாது.

ஆட்சித் தலைவனுக்கு அழகு,பொறுமையே; ஆத்திரமும், ஆக்ரோஷமும் அல்ல. அவை அழிவைத்தான் தேடித் தரும் ஒரு பக்கத்தால் நா இனிக்கச் சமாதானம் பேசிக்கொண்டு அடுத்த பக்கத்தால் நச்சைக் கக்கினால் ஆக்கத்துக்குப் பதில் அழிவே உண்டாகும் என்பதை உணர்வது நல்லது.

# உருளைக்கிழங்கு கடனை நீக்குக;

# விவசாய அமைச்சருக்கு மகஜர்

யாழ்ப்பாணம், ஜூன் 18

யாழ் மாவட்ட விவசாயிகள் உருளைக்கிழங்குச் செய்கைக்காகப் பெற்ற கடனை நீக்குமாறு வடக்கு - கிழக்கு மாகாண அரசின் விவசாய அமைச்சருக்கு கோப்பாய் கமச்செய்கையாளர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பான மகஜரை பிரஸ்தாப சங்கம் யாழ் அரசாங்க அதிபர் ஊடாக அனுப்பிஉள்ளது.

கடந்த காலங்களில் ஏற்பட்ட அனர்த்தங்களினால் உருளைக்கிழங்குச் செய்கை பாதிக்கப்பட்டிருப்பதால் விவசாயிகள் தாம் பெற்றகடனை மீளளிக்க முடியாத நிலையில் உள்ளனர் என்று மகஜரில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மகஜரின் சாரம் வருமாறு

ஆரம்பகாலம் தொடக்கம் அரசாங்கம் வெளிநாட்டு விதை உருளைக்கிழங்கை வரவழைத்து யாழ் விவசாயிகளுக்கு கொடுத்ததினால் பொருளாதாரத்தில் யாழ் கமச் செய்கையாளர்கள் பெருநன்மை அடைந்தனர்.

ஆனால் 84/85 இலும் அதன்பின்பும் தரமற்ற உள்நாட்டு விதை உருளைக்கிழங்கு வழங்கப்படுகிறது. வேண்டுமென்றே உருளைக்கிழங்குச்செய்கை பாழாக்கப்பட்டதுடன் கமச் செய்கையாளர்களும்மிக நஷ்டமடைந்தனர்.

இதனால் கமக்காரர் தாம் பெற்ற கடனை கட்ட முடியாது மோசமான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள்.

இதுபற்றி கமச்செய்கையாளர்களும் பல்வேறுபட்ட சங்கங்களும் பலமுறை விண்ணப்பித்தும் மனுக்கள் அனுப்பியும் எதுவித பயனும் ஏற்படவில்லை. பலர் உருளைக்கிழங்குச் செய்கையை கைவிட வேண்டியநிலையும் ஏற்பட்டுள்ளது.

இப்படி மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது (இ-7)

## ரூ. $1\frac{1}{2}$ லட்சம் பெறுமதியான மா கொள்ளை!

கொழும்பு, ஜூன் 18

பதவியா கூட்டுறவுச் சங்கத்திற்கு லொறியில் ஏற்றிச் சென்ற சுமார் ஒரு லட்சத்து 40 ஆயிரம் ரூபா பெறுமதியான கோதுமை மா இனந்தெரியாத நபர்களால் கடந்த வெள்ளிக்கிழமை இரவு கொள்ளையடிக்கப்பட்டது.

லொறியின் சாரதியும் அவரது உதவியாளரும் லொறியில் இருந்து இறக்கி விடப்பட்ட பின்னர் மா கொள்ளையிடப்பட்டதாகக் கூறப்படுகிறது. (ஒ-எ)

## பயணிகள் விடுவிப்பு

கொழும்பு, ஜூன் 18

கடந்த செவ்வாய்க்கிழமை கல்குடாவில் வைத்து காணாமற் போனதாகக் கூறப்பட்ட 7 ஜெர்மன் உல்லாசப் பயணிகளும் மட்டக்களப்பில் வைத்து வெள்ளிக்கிழமை விடுவிக்கப்பட்டனர்.

## வாசகர் திருமுகம்

### பஸ் பயணிகள் அவலம்

புங்குடுதீவு-இறுப்பிட்டி பகுதிக்கு நடத்தப்பட்டுவந்த இ. போ. ச பஸ் சேவை நிறுத்தப்பட்டுள்ளதால்இறுப்பிட்டிப்பகுதி மக்கள் பல்வேறு பிரயாணக் கஷ்டங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

இவர்கள் இப்பகுதியிலிருந்து கால் நடையாக வந்து பெருங்காட்டுச் சந்தியிலிருந்தே பிரயாணத்தை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

இதே போன்று பல வருடங்களுக்கு மேலாக நிறுத்தப்பட்ட வல்லவன் பகுதிஊடான இ. போ. ச சேவையினால் வல்லவன் மக்களும் பிரயாணக் கஷ்டங்களை எதிர் நோக்கியுள்ளார்கள்.

இப்பகுதி மக்கள் ஆலடிச் சகிந், குறிச்சுக்காட்டுச்சந்தி, ஆகிய இடங்களுக்கு கால் நடையாக வந்தே பிரயாணம் செய்ய வேண்டியுள்ளது.

இந்த இரு இடங்களுக்குமான இ. போ. ச சேவையை மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுப்பதன் மூலம் மக்களின் பிரயாண கஷ்டங்களைப் போக்க சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா?

'ஆலடி' காந்தன்
புங்குடுதீவு

## சமய சந்நிதிகளில்

### புங்குடுதீவு அந்தோனியார் உற்சவம்

யாழ்ப்பாணம் ஜூன் 18

புங்குடுதீவு அருள்மிகு அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவம் ஜூலை 8 ஆம் திகதி நடைபெறும்.

6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 30 மணிக்கு கொடியேற்றத்துடன் உற்சவம் ஆரம்பமாகும்.

7 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 5 30 மணிக்கு நற்கருணை பவனியும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு திருப்பலியும், அந்தோனியார் தேர்ப் பவனியும் இடம்பெறும். (இ-9)

### வைகாசி விசாகப்பொங்கல்

பச்சிலைப்பள்ளி, ஜூன் 18

பளை அறத்தி நகர் கண்ணகை அம்பாள் ஆலயத்தில் வைகாசி விசாகப் பொங்கல் சிறப்பாக நடைபெற்றது.

தூக்குக் காவடி, காவடிகள் போன்றவை பெருமளவில் நேர்த்திக் கடனாக நிறைவேற்றப்பட்டன. [இ-117]

# பேதங்களை நாமே தோற்றுவித்து

# பிரச்சினையை வளர்க்கிறோம்

## தேசியஇளைஞர் சேவைகள்மன்றத்தலைவர் கூறுகிறார்

அம்பாறை ஜூன் 18

சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் என்ற பேதங்களை நாமாகவே ஏற்படுத்திக் கொண்டு பிரச்சினைகளை வளர்க்கிறோம்.

இந்த நிலை அடியோடு ஒழிக்கப்பட்டு அனைவரும் சமம் என்ற மனப்பாங்கு செயலளவில் எம்மிடையே வளர வேண்டும்''.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தலைவரும், பணிப்பாளர் நாயகமுமான திரு பெனடிற் குமாரகே மேற் கண்டவாறு கூறினார்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றமும், சிறு கைத்தொழில் அபிவிருத்திப் பிரிவும் இலங்கை வங்கியுடன் இணைந்து நடத்தும் சுயதொழில் கடன் வழங்கும் வைபவம் ஒன்று கல்முனை பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்த வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையியேலே அவர் மேற் கண்டவாறு கூறினார்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் அம்பாறை மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி திரு பொன். செல்வநாயகம் தலைமையில் வைபவம் நடைபெற்றது.

பணிப்பாளர் நாயகம் திரு பெனடிற் குமாரகே தொடர்ந்து உரையாற்றுகையில் ''முன்னாள் பிரதமர் அமரர் திரு. டி. எஸ். சேனநாயக்க இங்கு வாழும் (அம்பாறை மாவட்டத்தில்) தமிழ், முஸ்லிம், சிங்கள விவசாயிகள் அனைவரது நல்வாழ்வுக்காகத் தான் சேனநாயக்க சமுத்திரத்தைக் கட்டினார்.

சிங்களவர்களுக்கு மட்டும் தான் இதனால் விவசாயம் பெருகும் என்று அவர் அன்று எண்ணிச் செயலாற்றவில்லை.

இன்று இந்த மாவட்டத்தில் வாழும் மூவின விவசாய மக்களும் அதனால் நீர்ப்பாசனம் பெற்று முன்னேறி வருகின்றனர் என்றார். (இ-14)

## இலங்கை பிரச்சினை பற்றி கருத்து

புதுடில்லி, ஜூன் 18

இலங்கை இனப்பிரச்சனை சம்பந்தமான பேச்சுக்களை சிங்களவரும் தமிழரும் விட்டுக் கொடுக்கும் உணர்வோடு நடத்த வேண்டும்.

புதுடில்லியில் இந்திய வெளியுறவு அமைச்சர் இந்தர்குமார்குஜ்ரால் முன் கண்டவாறு தெரிவித்தார். (ஒ-எ)

# அதிகாரிகளின் அசிரத்தையால்

# அபிவிருத்தி வேலைகள் தடங்கல்

## மருதங்கேணி கலந்துரையாடலில் ராஜன்

தாளையடி ஜூன் 18

''சில அரசாங்க அதிகாரிகளினதும், உத்தியோகத்தர்களினதும் அசிரத்தை காரணமாக, யாழ் மாவட்டத்தில் பல்வேறு அபிவிருத்தி வேலைகள் பூர்த்தி செய்யப்படாத நிலையில் உள்ளன''

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்திவேலைகள் தொடர்பாக மருதங்கேணியில் நடைபெற்ற கலந்துரையாடலில் விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணி யாழ் மாவட்ட அமைப்பாளர் திரு இராஜன் மேற்கண்டவாறு கூறினார்.

யாழ் மாவட்ட உள்ளுராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ். டிவகலாலா தலைமையில் இக் கலந்துரையாடல் மருதங்கேணி அரசினர் இந்து தமிழ் கலவன் பாடசாலையில் நடைபெற்றது.

யாழ் மாவட்ட அமைப்பாளர் திரு இராஜன் மேலும் பேசுகையில் சில திணைக்களங்கள் 1989ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீடு செய்த சில அபிவிருத்தி வேலைகளுக்கு. கேள்விப் பத்திரங்கள் கோராமல் இருக்கின்றன.

மரம், கல், மண் ஆகியவற்றுக்கு. எதிர்கால நலனை முன்னிட்டு சில கட்டுப்பாடுகளை வைத்துள்ளோம் எனினும் அபிவிருத்தி தேவைகருதி அவற்றுக்கு அனுமதிப் பத்திரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம்'' என்றார்.

விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி சார்பில் யாழ் மாவட்ட அரசியற் பொறுப்பாளர் திரு. டொமினிக், வடமராட்சி அரசியற் பொறுப்பாளர் திரு. குணம், வடமராட்சி கிழக்கு நாகர் கோவில் பொறுப்பாளர் திரு. சில்வஸ்ரார் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

ஈழவர் ஜனநாயக முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர்களின் பிரதிநிதிகளாக திருவாளர்கள் தாஸ், ரவி, ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

அத்தோடு வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் திரு ரீ. சந்திரசேகரம். பல்வேறு திணைக்களங்களின் பிரதிநிதிகள் வடமராட்சி கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கங்கள், சன சமூக நிலையங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் ஆகியோரும் கலந்து கொண்டார்கள்.

வடமராட்சி கிழக்கு மக்கள் எதிர் நோக்கும் போக்குவரத்து கல்வி, சுகாதாரம், உட்பட பல்வேறு துறைகளின் பிரச்சினைகள் பற்றி ஆராயப்பட்டு அவற்றுக்கான தீர்வுகளை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தீர்மானிக்கப்பட்டது. (இ-144)

## செய்திக்கொத்து

### அராலிக்குஇடமாற்றம்

விவசாய விஸ்தரிப்பு சபையாளராக கடமையாற்றி நற்சமயம் கிராம சேவை அலுவலராக பதவிமாற்றம் செய்யப்பட்டு மாதகலுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ள திரு. க. சந்திரசேகரம் பம்பாய் வெங்காய உற்பத்தியாளரின் வேண்டுகோளுக்கு இணங்க மீண்டும் அராலிப் பகுதியில் விவசாய விஸ்தரிப்பு வேலைகளுக்காக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இவர் இப்போது பம்பாய் வெங்காய செய்கை நிறைவுறும் போது மீண்டும் கிராம சேவை அலுவலர் பதவியை ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும் எனத் தெரிய வருகிறது. [இ-12]

### குரு வணக்க கௌரவிப்பு

சாவகச்சேரி ஜூன் 18

நுணாவில் மேற்கு விளைவேலி மருதடி வீரகத்தி விநாயகர் தேவஸ்தான பிரதம சிவாச்சாரியாருக்கு குரு வணக்க கௌரவிப்பு நடைபெற்றது.

பிரதம சிவாச்சாரியாரான சித்தாந்த வித்தகர், சிவாச்சாரிய செம்மல் சிவஸ்ரீ. கு. ஜெகதீஸ்வரக் குருக்களுக்கு குருவணக்கம் செய்யப்பட்டு பட்டமளித்து, பொன்னாடையும் போர்த்தப்பட்டது.

தேவஸ்தான அன்னதானச் சபைத்தலைவர் திரு இ. நாகநாதன் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் சாவகச்சேரி நீதிபதி செஞ்சொற் கொண்டல் திரு மு. திருநாவுக்கரசு ''சிவாகம கிரியா பானு'' என்னும் பட்டத்தை வழங்க சிவாசார்யதிலகம் வேதாகம சோதிட பூஷணம் சிவஸ்ரீ சி. சிதம்பரநாதக் குருக்கள் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். (இ-31)

### படம் திரை நீக்கம்

சாவகச்சேரி, ஜூன் 18

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி சாதனா பாடசாலை முப்பதாண்டுகள் ஆசிரியராயும் அதிபராயும் சேவையாற்றிய திரு. வி. வி. கந்தையாவை நினைவுகூரும் முகமாக அவரின் திருவுருவப் படம் திரை நீக்கம் செய்யப்பட்டது (இ-31)

# மக்களிடையேயுள்ள பிரச்சினை தீர்க்கவே இணக்க மன்று

## அங்குரார்ப்பணக் கூட்டத்தில் உரை

சாங்கேசன்துறை, ஜூன் 18

''மக்களிடையே அன்றாடம் பிரச்சினைகள் அதிகரித்த வண்ணம் உள்ளன. தினமும் முறைப்பாடுகளைச் செய்வதற்காக அநேகர் வந்து கொண்டிருக்கிறார்கள். இந் நிலையில அவர்களது பிரச்சினைகளை சமரசமாகத் தீர்த்து வைத்துமக்களிடையே அமைதியை ஏற்படுத்துவது அவசியமாகின்றது. ஆகவே தான் இணக்கமன்றுகளை ஏற்படுத்தி வருகிறோம்''.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் இடம் பெற்ற தெல்லிப்பழை மாவிட்டபுரம் வீமன்காமம் பகுதிகளுக்கான இணக்கமன்று அங்குரார்ப்பணக் கூட்டத்தில் உரையாற்றிய விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி அரசியல் பிரிவைச் சேர்ந்த திரு. கலேஷ் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும்பேசுகையில்-; கிராம சேவகர் பிரிவுகள் தோறும் இ[illegible] இணக்க மன்றுகளை நிறுவ திட்டமிட்டுள்ளோம் [illegible] அதனை உடனடியாக செயற்படுத்த முடியாமல் உள்ளது. தற்போது சிலகிராம சேவகர் பிரிவுகளை இணைத்தே இம் மன்றுகள் அமைக்கப்படுகின்றன காலப்போக்கில் இம் மன்றுகள் விஸ்தரிக்கப்படும்'' என்றார்.

தெல்லிப்பழைப் பகுதி இணக்கமன்றுகளின் மேற்பார்வையாளர் திரு. எம். நடராசா உரையாற்றுகையில் கூறியதாவது;-

மக்கள் தமது பிணக்குகளை தீர்த்து வைக்க புலிகளின் அலுவலகங்களுக்கு படையெடுக்கிறார்கள் ஆனால் இவற்றில் கவனம் செலுத்த விடுதலைப்புலிகளுக்கு நேரம் கிடைப்பதில்லை. அவர்களுக்கு பல்வேறு பணிகள் உள்ளன. ஆகவே தான் இந்த இணக்கமன்றுகள் ஆரம்பிக்கப்படுகின்றன. இவற்றை திறம்பட இயக்க அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்றார்.

[illegible] கள் தெரிவும் இடம் பெற்ற[illegible]

# மக்கள் துயர் துடைப்பதற்கு

# தனது நேசக் கரம் நீட்டியவர்

## வண. சந்திரா பெர்னாண்டோ நினைவு விழாவில் உரை

மட்டக்களப்பு, ஜூன் 18

''தமிழ் பேசும் மக்கள் நெருக்கடியான காலகட்டத்தில் வாழ்ந்த காலத்தில் அம்மக்களின் துயர் துடைக்க நேசக்கரம் நீட்டிப்பாடுபட்டவர் வணபிதா சந்திரா பெர்னாண்டோ.''

வணபிதா சந்திரா பெர்னாண்டோ நினைவு அஞ்சலிக் கூட்டத்தில் பேசுகையில் மட்டக்களப்பு திருமலை ஆயர் வண கிங்ஸ்லி சுவாம்பிள்ளை மேற்கண்டவாறு கூறினார்.

மட்டக்களப்பு சார்ஸ் மண்டபத்தில் நடைபெற்ற இக் கூட்டத்துக்கு வித்துவான் சா. இ. கமலநாதன் தலைமை வகித்தார்.

ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை தொடர்ந்து பேசுகையில் வண. பிதா சந்திரா பெர்னாண்டோ சமுதாயக் கோட்பாடுகளால் உந்தப்பட்ட காரணத்தால் தான் இப்பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார்.

பிரஜைகள் குழுவின் தலைவராக பதவி வகித்த அவர் அப்பணியை துணிச்சல், ஆர்வத்துடன் மனிதாபிமான உள்ளத்துடன் மேற்கொண்டதை எம்மக்கள் அறிவார்கள் இவர் தமிழ் முஸ்லிம் சமூக ஒற்றுமையின் பாலமாக விளங்கியவர். கடந்த கால சூழ்நிலையால் அவதியுற்றுத் தத்தளித்த மக்களுக்குச் சேவையாற்றிய பலரை நாம் இன்று இழந்து நிற்கின்றோம் இது மிகவும் மனவருத்தத்தைத் தரும் விடயமாகும். இப்படி அவர் கூறினார். (இ-ரி-121)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாங்குளம் தாக்குதலில் காயமடைந்தோர் விவரம்

பருத்தித்துறை ஜூன் 18

மாங்குளத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீ லங்கா இராணுவத்துக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் ஸ்ரீ லங்கா இராணுவத்தின் ஷெல் தாக்குதலின் போது பலர் காயமுற்றனர். காயமுற்றவர்களில் சிலர் சாவகச்சேரி அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டனர். அவர்களில் ஐவர் அவசர சத்திர சிகிச்சைக்காக வேறு வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப் பட்டனர்.

விபரம் வருமாறு:-

(1) திரு எஸ். றோஸ்மன் வயது 16 சாவகச்சேரி.
(2) திரு. எம். கார்மோகன் வயது 16 பருத்தித்துறை.
(3) திரு. எஸ். தங்கன் வயது 19 சாவகச்சேரி.
(4) திரு ஆர். சாந்தன் வயது 19 சாவகச்சேரி.
(5) திரு. எஸ் எம். நிக்ஸன் வயது 16 சாவகச்சேரி

இவர்களுக்கான அவசர சத்திர சிகிச்சைகளை விசேட வைத்திய நிபுணர் குழு மேற்கொண்டுள்ளது. (இ-118)

## அந்த 2 பொலீஸ் அதிகாரிகளும் கோட்டைக்குத் திரும்பவில்லை

யாழ் கோட்டை முகாமில் இருந்து கடந்த வெள்ளிக்கிழமை புலிகளின் அனுமதியுடன் வெளியே வந்த யாழ் பொலீஸ் அத்தியட்சகரும் உதவிப் பொலீஸ் அத்தியட்சகரும் மீண்டும் கோட்டைக்குத் திரும்பவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

யாழ் பொலீஸ் நிலையத்துக்கான தொலைபேசித் தொடர்புகள் துண்டிக்கப்பட்டிருப்பதால் இவர்கள் பற்றிய தகவல்களை அறிந்து கொள்ள முடியாது இருப்பதாக பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலீஸார் தெரிவித்தனர். (இ-18)

## குருநகரில் 2ஆவது நபரும் ஹெலி சூட்டிற்கே பலி

குருநகர். ஜூன் 18

சனிக்கிழமை காலை குருநகர் றெக்கிளமேசன் பாக் ரோட்டில் இறந்தவரின் சடலம் அடையாளம் காணப்பட்டதுடன் சூட்டுக் காயத்தால் அவர் இறந்தார் என்பது ஊர்ஜிதப்படுத்தப்பட்டுள்ளது.

இறந்தவர் மூன்று குழந்தைகளின் தந்தையான பெரிய நப்பன் கந்தசாமி (வயது 40) என்று தெரிவிக்கப்படுகிறது.

சனி காலை நடந்த தாக்குதலில் ரவை ஒன்று நெஞ்சூடாகச் சென்று வெளியில் வராத நிலையில் இவரது சடலம் காணப்பட்டது.

சடலம் நேற்று முன்தினம் மாலை புதைக்கப்பட்டது. குருநகர் பகுதியில் ஹெலி சூட்டு இறந்த இரண்டாவது நபர் இவர் ஆவார்.

இவர் அதிர்ச்சியால் மரணமானார் என முன்னர் நம்பப்பட்டது (இ 51)

## உள்ளூர் தொலைபேசி சீர்குலைவு

யாழ்ப்பாணம் ஜூன் 18

யாழ் நகர் ஷெல் வீச்சு காரணமாக சில உள்ளூர் தொலைபேசிகள் இயங்க முடியாதநிலையில் உள்ளன. [இ-10]

## சந்தை விலைகள்

சுன்னாகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம் சந்தைகளில் நேற்றைய மரக்கறி விலைகள் — கிலோ அடிப்படையில்;

| | சுன்னாகம்: | திருநெல்வேலி: | யாழ்ப்பாணம்: |
|---|---|---|---|
| கத்தரி | ரூ. 12 00-14 00 | ரூ. 12.00-13.00 | ரூ. 9.00-10.00 |
| வாழைக்காய் | ரூ. 8 00 10.00 | ரூ. 9.00-10.00 | ரூ. 12.00-14.00 |
| பயிற்றங்காய் | ரூ. 18 00-20.00 | ரூ. 16 00-18 00 | ரூ. 10.00-12 00 |
| பாகற்காய் | ரூ. 18.00-20 00 | ரூ. 18.00-20 00 | ரூ. 14.00-16.00 |
| கோவா | ரூ. 16 00-18.00 | ரூ. 16 00-18 00 | ரூ. 22 00-24.00 |
| லீக்ஸ் | ரூ. 26.00-28 00 | ரூ. 24 00-26.00 | ரூ. 24 00-26.00 |
| கரட் | ரூ. 24.00-28.00 | ரூ. 22.00-24.00 | ரூ. 16 00-18.00 |
| பீற்றூட் | ரூ. 10 00-12 00 | ரூ. 8.00-10.00 | ரூ. 10.00-12.00 |
| பீன்ஸ் | ரூ. 26.00-28 00 | ரூ. 24 00-26 00 | ரூ. 22 00-24.00 |
| பூசணி | ரூ. 6 00- 8 00 | ரூ. 6 00- 7.00 | ரூ. 5.00- 6.00 |
| பச்சைமிளகாய் | ரூ 35 00-40.00 | ரூ 30.00-40.00 | ரூ 33 00-35.00 |
| வெங் (வேதாளம்) | ரூ. 45.00-48 00 | ரூ 45.00-48 00 | ரூ. 48.00-50 00 |
| வெங்காயம் (சிறிய) | ரூ 30.00-35 00 | ரூ. 30 00-32.00 | ரூ. |
| உருளைக்கிழங்கு | ரூ. 35.00-36 00 | ரூ. 35 00-36 00 | ரூ. 34.00-36.00 |
| மரவள்ளிக்கிழங்கு | ரூ. 10.00-12.00 | ரூ. 10.00-12 00 | ரூ. 07.00-10.00 |
| வெண்டைக்காய் | ரூ. 18.00-24.00 | ரூ. 18.00-20.00 | ரூ. 18 00-20.00 |

## இரு விபத்துச் சம்பவங்களில் ஏழு பொலீஸார் உயிரிழப்பு

சென்னை, ஜூன் 18

தமிழ் நாட்டில் நேற்று நடந்த இரண்டு வெவ்வேறு விபத்துக்களில் ஏழு பொலீஸார் உயிரிழந்தனர் அவர்களில் இருவர் அதிகாரிகள்.

ஒரு விபத்து திண்டிவனம் அருகே இடம் பெற்றது.

பொலீஸார் பயணம் செய்த ஜீப் ஒன்று இரும்பு ஏற்றி வந்த லொறி ஒன்றுடன் நேருக்கு நேர் மோதியதில் ஜீப்பில் இருந்த பொலீஸார் மூவரும் மரணமானார்கள்.

இரண்டாவது விபத்து இராமநாதபுரம் மாவட்டம், ஏரிக்கரையில் இடம்பெற்றது. கன்னியாகுமரி நோக்கிச் சென்று கொண்டிருந்த ஜீப் அப்போது விபத்துக்குள்ளானதில் அதில் பயணம் செய்த நான்கு பொலீஸாரும் மரணமடைந்தனர். (ஒ-எ)

## படகுச் சேவை

மட்டக்களப்பு சந்திவெளி திகிலிவெட்டை ஆகிய கிராமங்களுக்கு இடையிலான படகுச்சேவையை அண்மையில் தமிழீழ விடுதலைப் புலிகள் பிரதிநிதி தளபதி கருணா ஆரம்பித்து வைத்தார். (இ)

## யாழ். திறந்த பல்கலைக்கழகத்தில் நேற்று நடக்க இருந்த பரீட்சை ஒத்திவைப்பு

கொக்குவில், ஜூன் 18

யாழ்ப்பாணம் திறந்த பல்கலைக்கழகத்தில் நேற்று நடைபெற இருந்த ஆங்கில தரப்படுத்தும்பரீட்சை திட்டமிட்டபடி நடைபெறவில்லை. இதனால் பரீட்சைக்குத் தோற்ற வந்தவர்கள் ஏமாற்றத்துடன் திரும்பினர்.

விஞ்ஞானப் பட்ட மாணி, தொழில் நுட்பவியல் டிப்புளோமா, புடவைத் தொழில் சான்றிதழ் ஆகிய பயிற்சி நெறிகளைப் பின்பற்றுவதற்கு விண்ணப்பித்தவர்களுக்கே இப்பரீட்சை நடைபெற இருந்தது.

யாழ். பிராந்திய நிலையத்திற்கூடாக 930 பேரும். நாவல தலைமைபகத்திலிருந்து யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் 300 பேரும் இப்பரீட்சைக்கு யாழ் பிராந்திய பரீட்சை நிலையத்தில் தோற்ற இருந்தனர்.

யாழ். மாவட்டத்தின் பல பாகங்களிலிருந்தும் நேற்று 250 பேர் வரையிலேயே வருகை தந்திருந்தனர்.

இவ் வினாத்தாள்களை எடுத்து வர கொழும்பு சென்றவர் கடந்த வெள்ளிக்கிழமையே வினாத்தாள்களுடன் யாழ்ப்பாணம் புறப்பட்டுவிட்டதாக அங்கிருந்து பிராந்திய நிலையத்திற்கு அறிவிக்கப்பட்டது. ஆனால் நேற்றுக் காலை 10 30 மணி வரை வினாத்தாள்கள் வந்துசேரவில்லை.

பிறிதொரு நாள் பரீட்சை நடைபெறும் எனவும், பரீட்சை நடைபெறும் திகதி தனிப்பட்ட முறையில் தெரிவிப்பதாக யின் சுயவிலாசமிட்ட அஞ்சலுறையை சமர்ப்பிக்கும்படியும், பிராந்தியப் பொறுப்பாளர் திரு கே. கருணாகரன் தெரிவித்துள்ளார் (ஒ 69)

## இன்றைய போட்டிகள்

மிலான், ஜூன் 18

இன்று திங்கள் நடைபெறவுள்ள உலக கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகள் வருமாறு:-

### 'பி' பிரிவு

ஆர்ஜென்ரீனா எதிர் ருமேனியா (இடம்: நேபிள்ஸ்)
கமரூன் எதிர் சோவியத் யூனியன் (இடம்: பாரி).

## பல இடங்க --

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ராஜா (மாத்தயா), ஆலோசகர் டாக்டர் அன்ரன் பாலசிங்கம், புலிகள் பிரமுகர் திரு. சுப்பிரமணியம் ஆகியோர் இந்த மாநாட்டில் பங்குபற்றினர்.

''இங்கு இடம்பெறும் யுத்த நிறுத்த மீறல்கள் பற்றி நீதி அமைச்சர் ஹமீத்துடனும், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்கவுடனும் தொடர்பு கொண்டு எமது கடும் ஆட்சேபத்தைத் தெரிவித்துள்ளோம்.

அரசபடைகள் யுத்தநிறுத்த மீறல்களில் ஈடுபட்டபோதும் நாம் பதில் நடவடிக்கை ஏதும் எடுக்காமல் கட்டுப்பாடுடன் இருந்து வருகிறோம்'' — என்று பத்திரிகையாளர் மாநாட்டில் விடுதலைப் புலிகள் தெரிவித்தனர். (உ)

## தொலைபேசி சீர்குலைவு; பின்னணியில் மூடுமந்திரம்

யாழ்ப்பாணம், ஜூன் 18

யுத்த நிறுத்தம் மீறல் பற்றிய விவரங்கள் கொழும்புக்கோ, வெளி உலகுக்கோ தெரியவராமல் மூடி மறைப்பதற்காகவே தமிழ்ப் பகுதிகளுக்கான தொலைத் தொடர்பு சேவைகள் துண்டிக்கப்பட்டிருக்கின்றன.

— இவ்வாறு விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் சந்தேகம் தெரிவித்திருக்கின்றன.

யாழ். நகரிலிருந்து வெளியூருக்கான தொலைபேசிச் சேவைகள் கடந்த வெள்ளிக்கிழமை சீர்குலைந்திருந்தன.

ஆனால் சனி காலையில் அமைச்சர் ஹமீத் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தபோது மீண்டும் இயங்கத் தொடங்கிய இச்சேவை மாலையில் அவர் பலாலியிலிருந்து புறப்பட்டதும் மீண்டும் செயல் இழந்தது.

யாழ்ப்பாணத்தில் உள்ள விடுதலைப் புலிகளின் தலைவர்களுடன் தொடர்பு கொண்டு பேச ஜனாப் ஹமீத் முயற்சிக்கும் போது எல்லாம் தொலைபேசிச் சேவை சீர் செய்யப்படுகின்றது, அவர் வடக்கிற்கு வந்து நிற்கும் போதும் அது ஒழுங்காக இயங்குகிறது.

ஆனால் கடந்த சில தினங்களாக ஏனைய நேரங்களில் அது சீர்குலைந்து விடுகிறது.

நேற்று யுத்த நிறுத்த மீறல்கள் பற்றி விடுதலைப் புலிகளின் தலைவர்கள் அரசுக்கு கடும் ஆட்சேபமும் கண்டனமும் தெரிவிக்க முயன்றனர். ஆனால் அரசுத் தலைவர்களுடன் அவர்கள் தொடர்பு கொள்ள முடியவில்லை. தமிழ்ப் பகுதிகள் எல்லாவற்றிலும் தொலைபேசி அவுட்!

--இவ்வாறு தொலைபேசிச் சேவை சீர்குலைவதில் மூடுமந்திரம் ஏதோ இருப்பதாக விடுதலைப் புலிகளின் உயர் தலைவர் ஒருவர் சந்தேகம் தெரிவித்தார். (உ)

## கோல் போட்ட வீரருக்கு கார்

அபுதாபி, ஜூன் 18

உலக கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் ஐக்கிய அரபு எமிறேற்ஸ் அணியின் சார்பில் கோல்போட்ட கலீல் இஸ்மாயில் என்ற வீரருக்கு ரோல்ஸ் ரோய்ஸ் கார் பரிசாக வழங்கப்படுகிறது.

கடந்த வெள்ளிக்கிழமை மேற்கு ஜேர்மனி அணியுடன் ஐக்கிய அரபு எமிறேற்ஸ் அணி மோதியது அந்தப் போட்டியில் 5—1 கோல்களால் மேற்கு ஜேர்மனி வெற்றியீட்டியது

எனினும், பலம்பொருந்திய மேற்கு ஜேர்மன் அணிக்கு எதிராக ஒரு கோலைப் புகுத்தியதே ஒரு சாதனை என்று ஐக்கிய அரபு எமிறேற்ஸ் கருதுகிறது.

## கட்டுப்பாடுகளை - -


[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

சில இடங்களில் மட்டும் யுத்த நிறுத்த மீறல் இடம் பெறுவதாகக்கூறுவது தவறு. பல இடங்களில் மீறல் சம்பவங்கள் இடம்பெற்றிருக்கின்றன. ஒரு குட்டி யுத்தமே நடக்கின்றது. நாம் இன்னும் தற்பாதுகாப்பு நடவடிக்கைகளைக் கூட எடுக்கவில்லை.

எவ்வளவு தூரம் பின்னுக்குப் போகமுடியுமோ அவ்வளவு தூரம் பின்னுக்குப் போகிறோம். பொறுத்திருந்து பார்ப்போம்-

—என்று திரு. மகேந்திரராஜா மேலும் கூறினார். [உ]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர்

திரு. செல்லையா அருணாசலம்

[அவர்கள்]

திதி: வைகாசி அமரபக்கத் தசமி

எங்களைப் பெற்று வளர்த்து ஆளாக்கிய எமது அன்புத் தந்தைக்கு எமது கண்ணீர் அஞ்சலிகள்!

சென்ற 19 - 05 - 1990 அன்று இயற்கை எய்திய எங்கள் பேரன்புக்குரிய குடும்பத் தலைவர் திரு. செல்லையா அருணாசலம் அவர்களது அந்தியேட்டிக் கிரியைகள் இன்று நடைபெறுவதால், அந்நிகழ்ச்சிகளிற் பங்குபற்றி அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு மேற்படி கிரியைகளையொட்டி எமது இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்திற் கலந்து கொள்ளுமாறும் உற்றார். உறவினர். நண்பர்களை அன்புரிமையுடன் வேண்டிக்கொள்கிறோம்.

இங்ஙனம்:

மக்கள்: அ. இராஜரத்தினம், அ. வேலாயுதம், அ. செந்திவேலாயுதம், அ. கருணைவேல் தங்கராணி, அன்னராணி.

மருமக்கள்: இராஜலிங்கம், பஞ்சாட்சரம், மருமகள்மார், பேரப்பிள்ளைகள்.

இமையாணன், உடுப்பிட்டி. (13448)

## வடக்கு, கிழக்கு மற்றும் வெளி மாவட்டப் பகுதிகளில் சிறீலங்கா முப்படைகளின் தாக்குதல்களினால் பாதிப்புக்குள்ளான பொதுமக்களின் கவனத்திற்கு!

வடக்கு, கிழக்கு மற்றும் வெளி மாவட்டப் பகுதிகளில் கடந்த 11 - 06 - 90 இல் இருந்து 16 - 06 - 90 வரை நடைபெற்ற சிறீலங்காவின் பாதுகாப்புப் படைகளின் தாக்குதல்களினால் பாதிப்பிற்குள்ளான பொதுமக்களிடமிருந்து கீழ்காணும் விபரங்களை விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி உடனடியாக திரட்டவிருப்பதால் கீழ்காணும், விபரங்களை தந்துதவுமாறு பொது மக்களை முன்னணி கேட்டுக் கொள்கிறது.

1. பாதிப்பு நிகழ்ந்த நாள்:-
2. பாதிப்பு நிகழ்ந்த இடம்:-
3. பாதிப்பு எத்தன்மையானது;-
4. பாதிப்பு யாரால் ஏற்படுத்தப்பட்டது:- (பொலீஸ் / இராணுவம் / கடற்படை / விமானப் படை / சாடையர்கள்)

(அ) உயிரிழந்தவரின் பெயர், வயது. முகவரி அவரது குடும்ப விபரம் போன்றவை தரப்பட வேண்டும்.

(ஆ) காயமுற்றோர் / ஊனமுற்றோர் பெயர், வயது, முகவரி, குடும்ப விபரம் போன்றவை தரப்பட வேண்டும்.

(இ) காணமற்போனவர் விபரம், பெயர், வயது. முகவரி, குடும்ப விபரம்.

(ஈ) கைது செய்யப்பட்டோர் விபரம், பெயர், வயது: முகவரி, குடும்ப விபரம் (யாரால், எப்போது, எவ்விடத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டார் என்ற விபரம் தரப்படவேண்டும்)

(உ) பாலியல் வன்முறைக்குள்ளாக்கப்பட்டவர்கள் விபரம், பெயர், வயது. பால், முகவரி, குடும்ப விபரம்.

(ஊ) படையினரின் நடவடிக்கைகளால் இழந்த / சேதமாக்கப்பட்ட சொத்துக்களின் விபரங்கள் (சொத்து இழப்பின் பெறுமதிகளை தெளிவாகவும், சரியாகவும் குறிப்பிடவும்)

பாதிப்பிற்குள்ளானவர்கள் மேற்படி விபரங்களைத் தயாரித்து அந்தந்த மாவட்டங்களிலுள்ள விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் மாவட்டச் செயலகங்களுக்கு தாமதிக்காமல் அனுப்பி வைக்கவும்.

குறிப்பு:-

மேற்படி விபரங்களைத் தயாரித்து காமதிக்காமல் எமக்குக் கிடைக்கச் செய்வதற்கு சமூகசேவகர்கள், நலன் விரும்பிகள், சிற்றூர் அவை உறுப்பினர்கள், பொது மக்கள் யாவரும் உதவ வேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றோம்.

பொதுச் செயலாளர்,
விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி

மாவட்டச் செயலகங்களின் முகவரிகள்:-

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி,
மாவட்டச் செயலகம்,
பிரதான வீதி,
கல்முனை.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி,
மாவட்டச் செயலகம்,
திருஞானசம்பந்தர் வீதி,
திருகோணமலை.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி,
மாவட்டச் செயலகம்,
மணல்குடியிருப்பு,
முல்லைத்தீவு.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி,
மாவட்டச் செயலகம்,
டிப்போ வீதி,
கனகபுரம்,
கிளிநொச்சி.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி,
தலைமைச் செயலகம்,
தர்மபுரம்,
கிளிநொச்சி

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி,
மாவட்டச் செயலகம்,
122, திருமலை வீதி,
மட்டக்களப்பு.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி,
மாவட்டச் செயலகம்,
வைரவப் புளியங்குளம்.
வவுனியா.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி,
மாவட்டச் செயலகம்,
பழையபூங்கா வீதி,
மன்னார்,

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி,
மாவட்டச் செயலகம்,
பலாலி வீதி,
கோண்டாவில்,
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரண்டாவது பிறந்த நாள் வாழ்த்து



★ செல்வன் அரிகரன் ★

நற்குணநாதன்- புஸ்பதேவி தம்பதியினரின் செல்வப் புதல்வன் அரிகரன் இன்று சுவிஸ்லாந்தில் தனது இரண்டாவது பிறந்த நாளைக் குதூகலமாகக் கொண்டாடுகின்றார். அரியை சுவிஸில் உள்ள அப்பா, அம்மா, தேவநாதன் சித்தப்பா, மற்றும் அன்ரிமார், அங்கிள்மார், அச்சுவேலி அப்பம்மா, சுபா அத்தை, சுன்னாகத்தில் வசிக்கும் ஐயா, அம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், அண்ணன்மார், அக்காமார், நிவேகா தங்கை, சந்துரு தம்பி, கரிகர ஐயப்பனின் துணையோடு பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

பருத்தி கலட்டி,
சுன்னாகம். (13446)

## இரண்டாவது பிறந்தநாள் வாழ்த்து



★ செல்வி தே. ஆஷா ★

[18 — 06 — 1990]

யாழ்ப்பாணம் கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த தேவமனோகரன்-ரூபசுதா தம்பதிகளின்செல்வப்புதல்வி ஆஷா இன்று (18 - 06 - 1990) தனது இரண்டாவது பிறந்த தினத்தைக் கொண்டாடுகின்றார். இவரை அப்பா, அம்மா, தங்கை வினோஷா. அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, கவிதா அன்ரி, அத்தை, மாமா, மச்சான்மார், பூட்டி, கொலண்ட் ரவிச் சித்தப்பா, கனடா குகன் சித்தப்பா, ஜேர்மன் லதா அன்ரி மற்றும் உற்றார், உறவினர்களும், புங்குடுதீவு கண்ணகியம்மன் அருள்பெற்று பல்கலைகளும் கற்றுப் பல்லாண்டுகாலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள். [3870]

### ஜனநாயகத்தை நிலைநாட்டும் வரை

# ருமேனியாவிற்கான நிதி உதவியை அமெரிக்க அரசாங்கம் நிறுத்தியது

## மனிதாபிமான உதவி தொடரும் என அறிவிப்பு

புக்காறெஸ்ற், ஜூன் 17

ருமேனியாவுக்கான மனிதாபிமான அடிப்படையில் வழங்கப்படாத சகல நிதி உதவிகளையும் நிறுத்துவதாக அமெரிக்கா அறிவித்து உள்ளது.

ருமேனியாவின் புதிய ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்ட திரு. எலியானுஸ்கியின் அரசு எதிர்க்கட்சிகள் மீது கடைப்பிடிக்கும் அடக்கு முறைகளுக்கு ஆட்சேபம் தெரிவித்தே அமெரிக்க அரசு இந்த நடவடிக்கை எடுத்து உள்ளது.

தேசிய மீட்பு முன்னணி அரசுக்கு எதிரான எதிர்க்கட்சித் தொண்டர்களின் ஆர்ப்பாட்டங்களை அடக்க வெளி மாவட்டங்களில் இருந்து சுரங்கத் தொழிலாளர்களை தலைநகர் புக்காறெஸ்டுககு ஜனாதிபதி எலியாஸ்கி அழைத்திருந்தார்.

அந்த சுரங்கத் தொழிலாளர்கள் தலைநகரில் குழுமியிருந்த அரசு எதிர்ப்பாளர்களில் பலரை அடித்துக்கொன்றனர்.

எதிர்க்கட்சிப்பத்திரிகை அலுவலகம் ஒன்றையும் சேதப்படுத்தினர்.

இதனிடையில் —

அரசாங்கத்தைப் பாதுகாக்க விசேட படைஒன்றை அமைக்கப்போவதாக ஜனாதிபதி எலியானுஸ்கி நேற்று அறிவித்தார்.

நெருக்கடி காலங்களில் இப்படை செயல்படும் என்றும் அவர் அறிவித்தார்.

பொலீஸாரில் தனக்கு நம்பிக்கை இல்லை என்றும் ஜனாதிபதி அறிவித்தார். (எ)

### ★ இணக்கம் இன்றி

## லைபீரியா நெருக்கடி பற்றிய பேச்சுக்கள் முடிவடைந்தன!

மொன்றோவியா, ஜூன். 17

லைபீரியா நெருக்கடி குறித்து சியாரோலேன் தலைநகரில் நடந்த பேச்சுக்கள் இணக்கமின்றி முடிவடைந்தன.

ஐந்து தினங்களாக இப்பேச்சுக்கள் இடம்பெற்றன.

யுத்த நிறுத்தம் செய்வது, அமைதியை நிலவச்செய்வது ஆகியன குறித்து பேசப்பட்டது.

மேலும் பேச்சுக்களை நடத்துவது என்ற தீர்மானம் மட்டுமே எடுக்கப்பட்டதாக இருதரப்பினரும் அறிவித்தனர்.

லைபீரியாவில் நடந்துவரும் ஆறுமாத கால சிவில் யுத்தத்தில் இதுவரை குறைந்தது ஆயிரம் பேருக்கு மேல் உயிரிழந்துள்ளனர். (எ)

## ஜூன் 22 பிரதமர் சிங் மாலே. செல்கிறார்

புதுடில்லி, ஜூன் 17

இந்தியப் பிரதமர் வி. பி. சிங் இம் மாதம் 22 முதல் 24 வரை மாலைதீவில் உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றை மேற்கொள்கிறார்.

மாலைதீவு ஜனாதிபதி ஜனாப் சயூமின் அழைப்பை ஏற்று திரு. சிங் செல்கிறார். (எ)

## மணிலாவில் பூமியதிர்ச்சி

மணிலா, ஜூன் 17

பிலிப்பீன்ஸின் மத்திய பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற கடுமையான பூகம்பத்தில் 4 பேர் உயிரிழந்தனர்.

பலவீடுகள் தரைமட்டமாகின. பூகம்பத்தின் தாக்கம் ரிச்றர் அளவில் 6.2 ஆகக்கணக்கிடப்பட்டது. (எ)

## சென்னை நகரில் மலேரியா!

சென்னை நகரில் மலேரியாவினால் பீடிக்கப்படுவோர் எண்ணிக்கை 40 சத வீதத்தால் அதிகரித்து உள்ளது.

முதல் ஐந்து மாதங்களில் பத்தாயிரம் பேர் மலேரியாக் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டனர். கடந்த ஆண்டில் இதே காலத்தில் சுமார் 7 ஆயிரம் பேரே பீடிக்கப்பட்டனர். (எ)

## மத்திய அமெரிக்க நாடுகள் மாநாடு

ஆறு மத்திய அமெரிக்க நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் மாநாடு கௌதமாலா தலைநகரில் ஆரம்பமானது.

வறுமை ஒழிப்பு பற்றி இம்மாநாட்டில் ஆராயப்படவுள்ளது. (எ)

## விரைவில் சமரசம்

வித்து. ஏனியா பிரச்சினை குறித்து விரைவில் சமரச உடன்பாடு ஒன்று ஏற்படும் வாய்ப்புக்கள் அதிகரித்து இருப்பதாக அறிவிக்கப்படுகிறது. (எ)

## பெற்றோருக்கு வேண்டுகோள்

சென்னை, ஜூன் 17

பாடசாலைகுழந்தைகளுககு தங்கநகைகள் அணிவித்து அனுப்ப வேண்டாம் என்றுபெற்றோர்கள் கோரப்பட்டுள்ளனர்.

நகைகள் போட்டு வரும் குழந்தைகளை வழிமறித்து திருடும் கோஷ்டிகள் சென்னை நகரில் தீவிரமாக இயங்குவதைத் தொடர்ந்து பாடசாலை நிர்வாகங்கள் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளன.

இந்த வேண்டுகோளை பெரும்பாலான பெற்றோர்கள் அனுசரித்து நடக்கின்றனர். சிலர் அக்கறை காட்டுகின்றார்களில்லை என்று [illegible] சார் கவலை தெரிவித்தனர். (எ)

## ரஷ்ய அரசுக்கு நெருக்கடி தரும் பாண் விலை அதிகரிப்பு!

பாணின் விலையை அதிகரிப்பது சோவியத்யூனியன் அரசுக்கு தலையிடியைக் கொடுத்துள்ளது.

எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி தொடக்கம் பாணின் விலையை மும்மடங்காக அதிகரிக்க மாஸ்கோ அரசு முடிவு செய்தது.

இது சம்பந்தமான பிரேரணையை சோவியத் பிரதமர் ரிஷ்கோவ் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்தார். கடுமையான விவாதத்தின் பின்னர் விலை உயர்வு பிரேரணை நிராகரிக்கப்பட்டது.

319 பேர் பிரேரணைக்கு எதிராக வாக்களித்தனர். 33பேர் ஆதரவாக வாக்களித்தனர். 12பேர் நடுநிலைவகித்தனர்.

இதனைத் தொடர்ந்து பாண் விலை உயர்வு குறித்து சோவியத் யூனியனில் உள்ள பதினைந்து குடியரசுகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவது என மாஸ்கோ அரசு தீர்மானித்துள்ளது.

பாண் விலை அதிகரிப்புப் பிரேரணை எதிர்வரும் செப்டம்பரில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

சோவியத் அரசு இதுவரை கடைப் பிடித்து வந்த பொருளாதார முறையை வர்த்தக பொருளாதார முறைக்கு மாற்றத் தீர்மானித்துள்ளது அதன் ஒரு கட்டமாகவே பாணின் விலை அதிகரிக்கப்படவுள்ளது. (எ)

## அரசாங்க அறிவித்தல்

**சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்,**

இப்பிராந்தியத்திலுள்ள பின்வரும் வைத்திய சாலைகளுக்கு பிரேத அறைகளுக்கான குளிரூட்டும் உபகரணங்கள் விநியோகித்தலுக்கும் அதை நிறுவுவதற்குமான (Supply and installation of Mortuary Coolers) கேள்விகள் கோரப்படுகின்றன.

1. ஆ. வை , பருத்தித்துறை.
2. மா. வை ,, தெல்லிப்பழை } 6 பிரேதங்கள்
3. மா. வை , கிளிநொச்சி.

மேலதிகவிவரங்களை இக்காரியாலயத்தில் பெற்று, 27 . 6 . 90 நண்பகல் 12 00 மணிக்கு முன் இக்காரியாலயத்தில் கிடைக்கத்தக்கதாக விண்ணப்பித்தல் வேண்டும்.

**வைத்திய கலாநிதி. ந.கனகசபை,**
சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர்
யாழ்ப்பாணம்.

(C/4744)



குமுலுஸ் D.F. போட்டி

BASF
குமுலுஸ் D.F.
பாவித்து மிளகாய் செய்கையில் அதிக விளைவு பெறுவதோடு பரிசுகளையும் பெறுங்கள்

| | |
|---|---|
| நப்சாக் தெளி கருவி — | 5 |
| ஸ்போட்ஸ் துவிச்சக்கர வண்டி — | 5 |
| கைத்தெளி கருவி — | 5 |
| சிறிய வானொலிப்பெட்டி — | 20 |
| எவரெடி ரோச் லைற் — | 48 |
| ரீ சேட் — | 100 |

மிகவும் இலகுவாக இந்த போட்டியில் பங்குபற்றலாம். நீங்கள் செய்ய வேண்டியது.

1. கீழேயுள்ள கூப்பனை அல்லது குமுலுஸ் DF பைக்கற்றுகளிலுள்ள கூப்பனை நிரப்பி, குமுலுஸ் பைக்கற்றுகளின் மேல்பகுதியை வெட்டி ஒவ்வொரு கூப்பனுடனும் 5 குமுலுஸ் மேல்பகுதிகளை சேர்த்து. பின்லே கெமிக்கல்ஸ் அன் டைஸ் (பிரைவேட்) லிமிட்டெட், 186 வக்சோல் வீதி, கொழும்பு 2 என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். ஒருவர் பலமுறை அனுப்பலாம்.
2. தபாலுறையின் இடதுபக்க மேல்பகுதியில் "குமுலுஸ் DF போட்டி" என எழுதவும்.
3. போட்டியின் முடிவு திகதி 30-06-1990
4. போட்டியின் அதிஸ்டசாலிகளின் பெயர்கள் பத்திரிகை மூலமும் கடிதம் மூலமும் அறிவிக்கப்படும்.
5. பின்லே கெமிக்கல்ஸ் ஊழியர்களும், பெஸ்ற் அன் போவேட் லிமிட்டெட் ஊழியர்களும் இந்த போட்டியில் பங்குபற்றமுடியாது.







பெயர் ______
முகவரி ______
வியாபாரியின் பெயர் ______
முகவரி ______

பின்லே கெமிக்கல்ஸ் அன் டையிஸ் (பிரைவெட்) லிமிட்டெட்
(விவசாய இரசாயன பகுதி)
186. வக்சோல் வீதி, கொழும்பு 2.

FINCHEM AGRO DIVISION

Licence No S/731

பீடை நாசினிகள் அபாயகரமானவை. **அவதானமாக பாவிக்கவும்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உதயன்

18-06-1990 திங்கட்கிழமை




## கோட்டைக்கு அருகேயுள்ள யாழ். தொலைத் தொடர்பு நிலையம் பண்ணையிலிருந்து இடம் மாறும்!

யாழ்ப்பாணம், ஜூன் 18

யாழ்ப்பாணம் பண்ணைத் தொலைத் தொடர்பு நிலையத்தில் வைக்கப்பட்டிருக்கும் தொலைபேசி பரிவர்த்தனை உபகரணங்கள் அங்கிருந்து நகரத்தில் பாதுகாப்பான ஓரிடத்திற்கு விரைவில் இடம் மாற்றம் செய்யப்படவிருக்கின்றன.

இதற்கான நடவடிக்கைகளைத் தொலைத் தொடர்பு திணைக்கள அதிகாரிகள் எடுத்து வருகின்றனர்.

தொலைபேசி பரிவர்த்தனை நிலையம் யாழ். கோட்டை இராணுவ முகாமுக்கு மிகச் சமீபமாக அமைந்திருப்பதால் தொலைபேசி பரிவர்த்தனை நிலைய அதிகாரிகளின் பாதுகாப்புக் கருதியும் —

தொலைபேசிச் சேவை சீர்குலைவதைத் தடுக்கும் நோக்கத்துடனுமே இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தொலைபேசி பரிவர்த்தனை நிலைய கருவிகள் இடம் மாற்றப்பட்டாலும் —

பண்ணையில் இருக்கும் தொலைத் தொடர்புக் கோபுரம் தொடர்ந்து செயற்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

புதிதாக பரிவர்த்தனை நிலையக் கருவிகள் பொருத்தப்படும் இடத்துக்கும் பண்ணை தொலைத் தொடர்பு கோபுரத்துக்கும் இடையில் விசேட இணைப்புகள் ஏற்படுத்தப்படும் என்றும் —

அவற்றின் மூலமாக புதிய பரிவர்த்தனை நிலையம் வெளியூர் அழைப்புக்களைப் பெற்றுக் கொள்ளும் வசதியைப் பெறும் என்றும் தெரிவிக்கப்பட்டது. [உ]

## பலாலி பகுதியில் மக்கள் தொடர்ந்து இடம்பெயர்வு

காங்கேசன்துறை, ஜூன் 18

யுத்தநிறுத்தம் அமுலுக்கு வந்ததை அடுத்து பலாலி, மயிலிட்டி, கட்டுவன், குரும்பசிட்டி பகுதி மக்கள் தமது இருப்பிடங்களுக்கு நேற்றுத் திரும்பினர். எனினும் அவர்கள் தமது வீடுகளில் இருந்து பெறுமதிமிக்க உடைமைகளை எடுத்துக் கொண்டு அப்பகுதியை விட்டு வெளியேறி வருவதை அவதானிக்கமுடிந்தது.

யுத்தநிறுத்தம் ஏற்பட்டாலும் மீண்டும் மோதல்கள் வெடிக்கக்கூடும் என்ற அச்ச உணர்வு அவர்களிடையே காணப்பட்டது.

இதேவேளை —

நேற்றுக் காலை எட்டு மணியளவில் பலாலி முகாம் பகுதியில் துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும் கேட்டன.

இதனையடுத்து இப்பகுதி மக்கள் தமது உடமைகளை ''லான்மாஸ்டர்கள்'' லொறிகள் மூலம் எடுத்துக்கொண்டு வெளியேறிவருகின்றனர்.

## இரு ரயில் நிலையங்களில் வானொலி சாதனம் அபகரிப்பு

பளை, கொடிகாமம் ரயில் நிலையங்களில் இருந்த வானொலித் தொடர்புச் சாதனங்கள் அபகரித்துச் செல்லப்பட்டன.

கடந்த 15 ஆம் திகதி இரவு ரயில் நிலையத்தினுள் நுழைந்த சிலர் இவற்றைக் கழற்றிச் சென்றதாக யாழ். ரயில் நிலையத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது

இரண்டு ரயில் நிலையங்களுக்கும் சில மாதங்களுக்கு முன்னரே வானொலித் தொடர்புச் சாதனங்கள் வழங்கப்பட்டிருந்தன. (இ-10)

## வடபகுதியில் பஸ் சேவை ஸ்தம்பிதம் அடையும் நிலை

யாழ்ப்பாணம் ஜூன் 18

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பஸ்சேவைகள் இன்னும் சிலதினங்களில் ஸ்தம்பிதம் அடையும் நிலை உருவாகிவருகிறது.

பஸ் டிப்போக்களில் குறைந்தளவு டீசல் கையிருப்பில் இருப்பதேஇதற்குக்காரணம்.

இதன் காரணமாக ஏற்கனவே சில டிப்போக்கள் மட்டுப்படுத்தப்பட்ட பஸ் சேவையை நடத்தி வருகின்றன. [இ-10]



### The Lions Club of Jaffna

Deeply regrets to announce the death under tragic circumstances of one of its senior dedicated member and past president

**Lion Dr. S. Sabaratnam**

**(Private Medical Practitioner, Vembadi)**

The members of the club salute him
For the numerous services rendered
By him to the club and to the community.

[C-4804]



## யாழ். நகரில் நேற்றிரவு ஹெலி பலமுறை சுற்றியது

### நகரப்புற மக்கள் வெளியேறினர்

யாழ். நகரப் பகுதியின் மேலாக நேற்றிரவு ஹெலிக்கொப்டர் பல தடவைகள் வட்டமிட்டது.

ஒரே ஹெலி போவதும் அடிக்கடி வருவதுமாக நேற்றிரவு எட்டு மணி முதல் பல தடவைகள் நகரை வட்டமிட்டமிட்டுச் சுற்றியது.

கோட்டைப் பக்கமாகவே அந்த ஹெலி அனேகமாகச் சுற்றியது.

இதனால் மக்கள் மத்தியில் பீதி ஏற்பட்டது. அதைத் தொடர்ந்து கோட்டைக்குச் சமீபமாகவுள்ள மக்களும் நகரை அண்டிய மக்களும் பாதுகாப்பான இடங்களை நோக்கி இடம் பெயரத் தொடங்கினர். [ஒ]

## காரைநகரில் வீடுகள் தகர்ப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 18

காரைநகர் பகுதியில் நேற்று இரண்டு வீடுகள் ஸ்ரீலங்கா கடற்படையினரால் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டன.

காரைநகர் கடற்படை முகாமுக்கு மிகச் சமீபமாக உள்ள இரண்டு வீடுகளே இவ்வாறு குண்டு வைத்து தகர்க்கப்பட்டன.

பிற்பகல் 2 மணியளவில் நடந்த இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து கடற்படை முகாமுக்கு அருகில் வசித்த மக்கள் நேற்று மாலை இடம்பெயர்ந்தனர்.

இதேவேளை நேற்று முன்தினம் சனிக்கிழமை நடந்த மோதல் சம்பவத்தின் எதிரொலியாக ஷெல் வீச்சில் மூவரும், துப்பாக்கிச் சூட்டுக்கு இருவரும் பலியானதாகத் தெரியவருகிறது (அ-9)

## வெளியேறிய மக்கள் திரும்பினர்

யாழ்ப்பாணம் ஜூன், 18

யாழ். நகரப்பகுதியில் இருந்து நேற்று முன் தினம் இடம் பெயர்ந்து சென்ற பொதுமக்கள் நேற்று மீண்டும் தமது இருப்பிடங்களுக்கு திரும்பினர்.

ஷெல் தாக்குதல் காரணமாக கொட்டடி, நாவாந்துறை, குருநாகல், பாஷையூர் 1ஆம் 2ஆம் 3 ஆம் குறுக்குத் தெருக்கள் ஆகியவற்றிலும் அருந்து ஆயிரக்கணக்கான மக்கள் வேறிடங்களுக்கு இடம் பெயர்ந்திருந்தனர்.

எனினும் யுத்த நிறுத்தம் அறிவிக்கப்பட்டதையடுத்து நேற்று சகலரும் தமது சொந்த இடங்களுக்கு மூட்டை முடிச்சுகளுடன் திரும்பி வந்ததையும் காண முடிந்தது. (இ-10)

## போதைவஸ்து கடத்திய இந்தியப் பிரசைகள் கைது!

முப்பது கிலோ அபின், 2 கிலோ ஹெறோயின் ஆகியவற்றைசிங்கப்பூருக்கு கடத்திச் சென்றதாசக கூறப்படும் 4 இந்தியப் பிரசைகள், ஒரு சிங்கப்பூர் பிரசை ஆகியோர் சிங்கப்பூரில் வைத்துக் கைது செய்யப்பட்டனர்.

இவர்களில் சிங்கப்பூர் பிரசை மீது இன்று (திங்கள்) வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது.

சிங்கப்பூர் சட்டத்தின்படி 15 கிராம்களுக்கு அதிகமான ஹெரோயின், ஆயிரம் கிராம்களுக்கு அதிகமான அபின் ஆகியவற்றை வைத்திருப்பவருக்குகட்டாயமாகமரணதண்டனை விதிக்கப்பட்டாக வேண்டும்.

## ஹெலிக்கொப்டரிலிருந்து உணவுப் பார்சல்கள் என்ற பெயரில் ரவைகள்!

யாழ்ப்பாணம், ஜூன் 18

வடக்கு, கிழக்கில் வெளித் தொடர்பு இன்றி தனித்து விடப்பட்டிருக்கும் ஸ்ரீலங்கா இராணுவப் படை முகாம்களுக்கு நேற்று ஹெலிக்கொப்டர்களில் இருந்து உணவுப் பார்சல்கள் என்ற போர்வையில் ரவைகள் போடப்பட்டிருக்கின்றன.

இவ்வாறு போடப்பட்ட பொதிகளில் சில தவறுதலாக விடுதலைப் புலிகள் நிலைகொண்டிருந்த பகுதிகளிலும் விழுந்துள்ளன.

—இந்தத் தகவலை விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைவர் திரு. கோபாலசாமி மகேந்திரராஜா (மாத்தயா) வெளியிட்டார்.

யுத்த நிறுத்த விதிமுறைகளுக்கு அமைய தனித்து விடப்பட்ட படையினருக்கு உணவு மற்றும் மருந்து வகைகளை விமானப் படையினர் ஹெலிக்கொப்டர்கள் மூலம் பார்சலாகப் போட்டுவருகின்றனர்—

உணவுப் பொதி போடுகிறோம் என்ற பெயரிலேயே ரவைகளையும் அவர்கள் போடுகிறார்கள். இதுவும் ஒரு வகையில் யுத்த நிறுத்த மீறலே—

இப்படிப் போடப்பட்ட பொதிகளில் ஒன்று தவறுதலாக அருகில் நிலை கொண்டிருந்த விடுதலைப் புலிகள் மத்தியிலும் விழுந்துள்ளது. -என்று அவர் மேலும் சொன்னார். (உ)

## உணவுப் பொருள்களை எடுத்துச் செல்ல அழைப்பு

### ப. நோ. கூ. சங்கங்களுக்கு

யாழ்ப்பாணம், ஜூன் 18

காங்கேசன் உணவுக் களஞ்சியத்திலுள்ள உணவுப் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கு சகல பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கொள்வனவு உத்தியோகத்தர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அவர்களை இன்று காலை 8 மணிக்கு தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைமை அலுவலகத்திற்கு வருமாறு கேட்கப்பட்டிருக்கிறது.

பொருள்களை எடுத்துச் செல்ல ஏதுவாக வாகன வசதியுடன் வரும்படியும் கேட்கப்பட்டுள்ளது. (உ-9)

### சங்கானையில்

குருநகர், ஜூன் 18

சங்கானை, அருள்மிகு புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தான நாதமிகு கண்டா (மணி) பிரதிஸ்டை அஸ்டோத்ரசத விழா இன்று 18 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 06 மணிக்கு நடைபெறும்.

விழாவில் நாசராஜா குழுவினரின் மேளக்கச்சேரி, ''திருவருள்'' என்னும் பொருளில் ஆசிரியர் பொன். சதாசிவம் நிகழ்த்தும் பிரசங்கம் ஆகியனவும் இடம் பெறும். [இ-51]

## மட்டுநகரில் மோதல் ஹெலியும் சேதமுற்றது?

மட்டக்களப்பு நகரையும் அதைச் சூழவுள்ள பகுதிகளிலும் கடும் மோதல் வெடித்திருப்பதாக இந்திய வானொலி நேற்று நள்ளிரவு அறிவித்தது. ஸ்ரீலங்கா பாதுகாப்புப் படை வட்டாரங்களை மேற்கோள் காட்டி இந்தச் செய்தி வெளியிடப்பட்டது.

ஆனால் அங்கு மோதல்கள் நடைபெறுகின்றதா என்பதை இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை ஊர்ஜிதப் படுத்த முடியவில்லை.

மட்டக்களப்பில் பெரும் ஷெல் தாக்குதல்கள் இடம் பெற்று வருவதாகவும்—

காயமுற்ற சிப்பாய்களை ஏற்றுவதற்கு முயற்சித்த ஹெலிக்கொப்டர் ஒன்று பண்குளத்தில் புலிகளின் தாக்குதலினால் சேதமுற்றது என்றும் இந்திய வானொலி தெரிவித்தது. (உ)

## நோயாளிகள் திரும்பி வந்தனர்

நேற்று முன்தினம் ஷெல் தாக்குதல்கள் காரணமாக யாழ் ஆஸ்பத்திரியில் இருந்து அவசர அவசரமாக வெளியேறிய நோயாளிகள் நேற்று மீண்டும் வந்து சேர்ந்தனர்.

நோயாளிகள் வெளியேறியதால் நேற்றுமுன்தினம் யாழ் ஆஸ்பத்திரி வெறிச்சோடிக் காணப்பட்டது. (இ-9-10)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 18-06-1990 இல் அச்சிட்டு



## ஆத்மீக சிரார்த்த அழைப்பிதழ்

(ஆண்டுத்திதி)

கடந்த 28-06-1989 அன்று சிவபதப்பேறு எய்திய எங்கள் தந்தையார் சப்தாப்தசிலர் - பாலபண்டிதர் - சிவஸ்ரீ - நா - கணேசராஜக் குருக்கள் (சின்னத்துரை ஐயா)

புங்குடுதீவு - 8

அவர்களுடைய முதலாவது ஆண்டு ஆத்மீக சிரார்த்தம் - கொக்குவில் மேற்கு நாகலிங்கம் வீதியில் வசிக்கும் அன்னாரின் மகன் க. சிவகுமாரக் குருக்கள் அவர்களுடைய இல்லத்தில் இன்று (18 06-90) திங்கட்கிழமை நடைபெறும். உற்றார், உறவினர்கள், அன்பர்கள் அனைவரும் கலந்துகொண்டு ஐயா அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் வண்ணம் அன்புடன்வேண்டுகின்றோம்.

இங்ஙனம்

சிவஸ்ரீ. க. குகதாசக்குருக்கள்,
உயரப்புலம்,
ஆனைக்கோட்டை.

க. சிவகுமாரக்குருக்கள்,
பிரதமகுரு,
முருகன் ஆலயம்
மஞ்சவனப்பதி,
கொக்குவில்.

அன்னாரின் மனைவியும் ஏனைய மக்கள், மருமக்கள் பங்குபற்றும் ஆத்மீக சிரார்த்தம் தென்னிந்திய இராமேஸ்வரப் புனிதஸ்தலத்தில் நடைபெறுகின்றது.
(தனிப்பட்ட அழைப்பு தரமுடியாமைக்கு வருந்துகின்றோம்.)

[13742]



## மரண அறிவித்தல்கள்

### திருமதி கனகம்மா செல்வரட்ணம்

நீர்வேலியைப் பிறப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்ற வேலுப்பிள்ளை சோமசுந்தரம் [இளைப்பாறிய றெயில்வே பென்சனியர்] அவர்களின் சிரேஷ்ட புதல்வி திருமதி கனகம்மா செல்வரட்ணம் 17-06-1990 ஞாயிற்றுக்கிழமை அதிகாலை காலமானார்.

இவர் பாக்கியத்தின் அன்பு மகளும், சங்கானையைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை செல்வரத்தினம் [இளைப்பாறிய றெயில்வே பென்சனியர்] அவர்களின் அன்பு மனைவியும், சோமசுந்தரம் சொக்கலிங்கம் [பிராந்திய முகாமையாளர், வட பிராந்திய போக்குவரத்துச் சபை, கோண்டாவில்] அவர்களின் ஆருயிர் சகோதரியும், சத்தியவதி-தேவி [Canada], திலகவதி-ராணி [Colombo], காலஞ்சென்ற லலிதாதேவி-மலர், செல்வதாஸ் [உருப்பிராய் இந்துக் கல்லூரி] இவர்களின் அன்புத் தாயாரும், கந்தசாமி ஸ்காந்தேஸ்வரன் [Canada] அவர்களின் அருமை மாமியாரும், சந்திராதேவி சொக்கலிங்கம் [ஆசிரியை, வேம்படி மகளிர் உயர் கல்லூரி] அவர்களின் அருமை மைத்துனியும், கொக்குவிலைச் சேர்ந்த தங்கமலர், நாகராசா, சுப்பிரமணியம், நீர்வேலியைச் சேர்ந்த கணேசன் ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரியும், சியாம்சுந்தர் [U.K], மதனசுந்தர் [சென். ஜோன்ஸ் கல்லூரி], பிரசாந்தி [வேம்படி மகளிர் உயர்தர கல்லூரி] இவர்களின் அன்பு மாமியாரும், சிந்துஜா ஸ்காந்தேஸ்வரன் [Canada] இவரின் ஆசைப் பேத்தியாரும், சங்கானையைச் சேர்ந்த ஞானேஸ்வரி, யோகரட்ணம், ரட்னேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும், அன்னசத்திர லேனைச் சேர்ந்த சின்னப்பு கந்தசாமி [இளைப்பாறிய ஆசிரியர்] அவர்களின் அன்புச் சம்மந்தியும் ஆவார்.

இவரின் ஈமக்கிரியைகள் இன்று திங்கட்கிழமை [18 06-1990] 315, நாவலர் வீதியிலுள்ள இல்லத்தில் மாலை 3-00 மணியளவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் அனைவரையும் அன்புடன் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் சொள்கின்றோம்.

''சந்திரா இல்லம்''
315, நாவலர் வீதி,
ஆனைப்பந்தி.

தகவல்;
சொக்கலிங்கம் . சோ

[13451]

### P. K. C. குமாரதாசன்

[முன்னாள் திறைசேரி பிரதிப் பணிப்பாளர்]

முன்னாள் திறைசேரி பிரதிப் பணிப்பாளர் P.K.C. குமாரதாசன் சென்னையில் காலமானார்.

ஈமக்கிரியைகள் பற்றிய விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்;
செ. யோகீஸ்வரன்

இந்துக் கல்லூரி ஒழுங்கை,
சங்கத்தானை,
சாவகச்சேரி.

[13449]

### திரு. B. J. அலோசியஸ்

[B. J. அலோசியஸ் அன் சன்ஸ் உரிமையாளர், 59/1, பெரியகடை, யாழ்ப்பாணம்]

திரு B. J. அலோசியஸ் அவர்கள் 16-06-1990 இல் காலமானார்.

இவர் பிரான்சிஸ்காவின் அன்புக் கணவரும், ஜசிந்தா, எமல்டா, றீற்றா, ஜஸ்ரின், டன்ஸ்ரன், செரில்லா, அகஸ்ரின், அனிற்றா, ஒலிவா, பவுஸ்ரின், அன்ரிடா ஆகியோரின் அன்புத் தந்தையும், அந்தோனிப்பிள்ளை, இராசையா (கிறிஸ்ரி), அன்ரனி, வசந்தகுமார், இமானுவேல் ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் 16-06-1990 சனிக்கிழமை மாலை கரம்பனில் நடைபெற்றது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

[3876]

### திரு. சின்னத்தம்பி குமாரசாமி

திரு. சின்னத்தம்பி குமாரசாமி 16-06-1990 இல் காலமானார்.

இவர் கரம்பொன் கிழக்கைச் சேர்ந்தவரும், அம்பிகாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற திருமதி செல்லத்துரை, திருமதி மாணிக்கம், திருமதி நடராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும், லலிதகுமாரி, சுரேஸ்குமார், சசிதகுமார், சுகிர்தகுமாரி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஸ்ரீரஞ்சன் (புனித அந்தோனியார் கல்லூரி, ஊர்காவற்றுறை), மேனகா, அருள்நாயகம் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், குருபரன், சிவகாமி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 17-06-1990 இல் கரம்பொனில் நடைபெற்றது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கு. சுரேஸ்குமார்

பண்ணை றோட்,
கரம்பொன் கிழக்கு,
ஊர்காவற்றுறை.

[13450]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org